434

# இமயம் கண்ட இருபெரு வேந்தர்



விவேகானந்தா பதிப்பகம்

புரம் :: திருவாரூர்

# இமயம் கண்ட
# இரு பெரு வேந்தர்.

அ. மு. பரமசிவானந்தம், M.A., M. Litt.,
துணைத்தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30

விவேகானந்தா பதிப்பகம்,
விஜயபுரம், திருவாரூர்.

உரிமைப் பதிப்பு] 1957 [விலை 0—14—0
நயே பைசே 87.

முதற் பதிப்பு 1955
திருத்திய இரண்டாம் பதிப்பு 1956
மூன்றும் பதிப்பு 1957

112405

Approved by The T. B. C. Madras
Vide Fort St., George Gazette Part I-B Page 21
Dated 10th April 1957.

Printed on White Printing Paper 24 lbs.

Rajan Electric Press, Madras-1.

# முன்னுரை

தமிழ் நாடு மிகப் பழங் காலத்திலிருந்தே பெருமையுற்றிருந்தது. வீரத்திலும், வெற்றியிலும் வாணிபத்திலும், வாழ்க்கை முறையிலும் மேம்பட்டு, பிறநாட்டார் போற்றும் வகையில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். அவ்வாறு நாடும் மக்களும் சிறந்து வாழக் காரணமாயிருந்தவர்கள் அக்காலத்து அரசர்களேயாவர். 'காட்சிக் கெளியனுய்க் கடுஞ் சொல்லன் அல்லனுய்'த் தன் குடிகளை அணைத்துச் சென்றனர் அரசர். அதேவேளையில் மாற்றார் தம்மை அவமதிப்பாராயின் அவர் யாவராயினும் அஞ்சாது அவர்மேல் படை எடுத்துச் சென்று வெற்றிபெறுவர். அவ்வாறு பகைவரை வென்று இமயம்வரைத் தம் கொடி பறக்கும் வகையில் அரசாண்ட தமிழ் வேந்தர் சிலர். அவருள் முதலாவதாக வைத்து எண்ணப்பட வேண்டியவர்கள் சோழன் கரிகாற் பெருவளத்தானும், சேரன் செங்குட்டுவனும்.

'இமயம் கண்ட இரு பெரு வேந்தர்' என்று இந்நூலுள் பாராட்டப் பெறுவோர் அவ்விரு பெருந் தமிழ் மன்னரே யாவர். உரிமை பெற்ற இன்றைய இந்திய நாட்டில் பழம்பெரு வரலாறுகளெல்லாம் புதுக்கி எழுதப்பெறுகின்றன. நம் தமிழ் நாட்டு வரலாற்றையும் நம் நாட்டு மாணவர் அறிந்து கொள்ளுதல் கடமையாகும். எனவேதான் இவ் வெற்றி வேந்தர் இருவர்தம் வரலாறுகளையும் கதைப் போக்கில் எழுதத் துணிந்தேன்.

இந்நூலை மாணவர் உலகம் பெற்றுப் பயன் பெறவேண்டுமென விரும்பினார்கள் திருவாரூர் விவேகானந்தா பதிப்பகத்தார். அவர் தம் விருப்பப் படியே மாணவர் பயின்று, இவ்விரு பெரு வேந்தர் தம் வரலாறு அறிந்து கொள்ளும் வகையில் மிகச் சுருக்கி இந்நூலை எழுதியுள்ளேன். இவர் தம் வரலாற்றில் ஆர்வமுள்ள மாணவர்கள் இந்நூலில் குறிப்பிடப்பெறும் அன்றைய இலக்கியங்களை வாய்ப்பும் வசதியும் நேருமேல் பின்னர்ப் படித்துப் பயன் பெறலாம். இங்கு வரலாறு கதைப் போக்கிலேதான் செல்லுகிறது.

இந்நூலை வெளியிட விரும்பிய விவேகானந்தா பதிப்பகத்தாருக்கு என் நன்றி. இந்நூல் மாணவர் உலகுக்குப் பயன்பெறும் என்னும் துணிபுடையேன்.

தமிழ்க்கலை இல்லம்<br>சென்னை-30<br>1—10—'55

அ. மு. பரமசிவானந்தம்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | **I கரிகால் வளவன்** | |
| 1. | தோற்றமும் இளமையும் ... | 9 |
| 2. | ஆட்சியும் போரும் ... | 19 |
| 3. | வளமும் வாணிபமும் ... | 34 |
| 4. | கல்வியும் பண்பாடும் ... | 44 |
| | **II சேரன் செங்குட்டுவன்** | |
| 1. | நாடும் மன்னனும் ... | 57 |
| 2. | போர்த் திறன் ... | 65 |
| 3. | வஞ்சி சேர்ந்த கண்ணகி ... | 75 |
| 4. | வடநாட்டில் சேரன் ... | 84 |
| 5. | வஞ்சியில் பெருவிழா ... | 91 |
| 6. | குண நலன்கள் ... | 95 |

# கரிகால் வளவன்

# 1. தோற்றமும் இளமையும்

வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட நாட்டைத் தொன்றுதொட்டுத் தமிழ்நாடு என வழங்கி வந்தனர். தமிழ் மொழி இங்குப் பேசப் பட்டமையின் இந்நாடு அவ்வாறு அழைக்கப்பெற்றது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இத்தமிழ்நாடு விரிந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்த தெனவும், காலந்தோறும் ஏற்பட்ட ஊழிகளால் பெரும் பகுதி கடலால் கொள்ளப்பட, எஞ்சிய இன்றைப் பகுதி தான் நிலைத்ததெனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர். மேலும் தமிழ்நாடு பழங்காலத்தில் தன் வாணிபத்தி லும் கைத்தொழிலிலும், பிற பண்பாடுகளிலும் மேன்மையுற்றிருந்தது என்பதற்கு வேண்டிய சான்றுகள் உள்ளன. தமிழரது பொற்காலம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு காலம் இந்நாட்டு வரலாற்றில் கழிந்து விட்டது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இத்தமிழ்நாடு மிகப் பழங்காலம் தொட்டு மூன்று பிரிவாகப் பிரிக்கப் பட்டிருந்தது. தெற்குக் கோடியில் இருந்த பகுதியினைப் பாண்டியர் என்ற மன்னவர் முறையாக நெடுங்காலம் ஆண்டு வந்த னர். வடக்கையும் வடகிழக்குப் பகுதியையும் சோழரும், மேல்பகுதியைச் சேரரும் ஆண்டு வந்த னர். எனவே இந்த அரசர்கள் ஆண்ட மூன்று பகுதி களும் முறையே பாண்டியநாடு, சோழநாடு, சேர நாடு என அழைக்கப் பெற்றன. இந்த வேந்தர்கள் முடி தரித்து நாடாண்டமையின் இவர்கள் 'முடி யுடை மூவேந்தர்' என அழைக்கப் பெற்றனர். தமிழ்

நாட்டில் இம்மூவேந்தரைத் தவிர்த்து வேறு சில சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் வாழ்ந்து வந்தனர். இம்மன்னர்களைப் பற்றிய குறிப்புக்களையெல்லாம் சங்ககாலப் பாடல்களுள் காணலாம்.

சங்க காலம் என்பது இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர். தமிழ் நாட்டுள் முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்கள் இருந்தன எனவும், அவற்றுள் கடைச் சங்கமே ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் மதுரையில் இருந்தது எனவும் ஆராய்ச்சியாளர் எழுதுகின்றனர். அக்கடைச் சங்க காலமே தமிழர்தம் பொற்காலமெனை அறுதியிட்டுரைக்கின்றனர்.

அக்காலத்தில் தமிழ் நாட்டை ஆண்ட பெரு மன்னர்கள் பலராவர். தம் நாட்டைச் சீராக்கிப் பாதுகாத்ததோடு அமையாது பிற நாடுகளின்மேல் படையெடுத்து வெற்றி கண்ட வீர மன்னர்களும் வாழ்ந்துள்ளனர். ஒருசிலர் கடல் கடந்து ஈழ நாடு முதலியவற்றையும், வடக்கு நோக்கிச் சென்று, இமயம் வரை உள்ள நாடுகளையும் வென்று தம் அடிக்கீழ்ப் படுத்தினர் என்பதையும் காண்கின்றோம். ஒருசில மன்னர்கள் காடு கொன்று நாடாக்கியும், குளம், ஏரி முதலியன வெட்டி நாட்டு வளத்தைப் பெருக்கியும், காவிரி முதலிய பேராறுகளுக்குக் கரை கட்டியும், வற்றிக் கிடந்த பல பகுதிகளை வளமுறச் செய்த சிறப்பு வரலாறு அறிந்த ஒன்றாகும். அத்தகைய அரசருள் சிறந்த இரு பெருமன்னர்கள் சோழன் கரிகால் பெருவளத்தானும், சேரன் செங்குட்டுவனும் ஆவார்கள். இரு



வரும் இமயம் வரை சென்று வெற்றி கண்டு, தத்தம் கொடிகளை இமயத்தில் நாட்டியவர்கள். இவருள் காலத்தால் முந்திய சோழன் கரிகால் வளவனைப்பற்றிக் காண்போம்.

தமிழ் நாட்டை வாழ்விக்கும் தாயாகி வளம் பெருக்கும் ஆறு பொன்னி என்னும் காவிரியாகும். வான் பொய்ப்பினும் தான் பொய்யா வகையில் காவிரி என்றும் நீரைக்கொண்டு வந்து நாட்டை வளம் செய்கிறது. அக்காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்வதால் அப்பகுதிக்குக் 'காவிரி நாடு' என்றும், அதை ஆளும் மன்னனுக்குக் 'காவிரி நாடன்' என்றும் பெயர்கள் வழங்கின. அக் காவிரி நாடே சோழ நாடு. 'சோழ வளநாடு சோறுடைத்து' என்ற ஒரு பழமொழி நாட்டில் வழங்கி வருவதை நாம் அறிவோம். இத்தகைய வளம் நிறைந்த நாட்டை ஆண்ட மன்னர்களே 'சோழ மன்னர்' என்பவர். இம்மன்னர் எக்காலம் முதல் தமிழ் நாட்டை ஆண்டனர் என்று கூறுவதற்கில்லை. தமிழ் நாட்டு வரலாறு அறிந்த மிகப்பழங்காலம் தொட்டே இங்கு இவர்கள் ஆண்டிருக்கின்றனர். இவர்களைப்பற்றிப் புலவர்கள் பலர் தனி நூல்களும் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளனர். எனவே இவர்கள் தமிழ் நாட்டின் விளக்காக நின்றார்கள் என்று கூறுவது பொருந்தும். இம்மன்னர் வரிசையில் சிலர் சிறந்த வீரர்களாகப் போற்றப்படுகின்றனர். அவருள் கடைச்சங்க இறுதிக் காலத்தில் வாழ்ந்து இமயம் வரையில் படையெடுத்துச் சென்று வெற்றிகண்ட வீர மன்னனே சோழன் கரிகாற் பெருவளத்தான்.

சங்க காலத்தில் சோழ நாட்டுக்குச் சிறந்த துறைமுகமாகவும் தலைநகராகவும் விளங்கியது புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினமாகும். இது காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந்திருந்த ஒரு பெருநகராகும். இது கடைச்சங்க காலத்துக்குப்பின் அழிவுற்றதென்பர். அப்பெரு நகரம் தன் நிலைகெட்ட போதிலும் பேர் கெடாத வகையில், தற்காலத்திய மாயூரமாகிய மயிலாடு துறைக்கு வடகிழக்கில் பத்துக்கல் தொலைவில், கடற்கரையை ஒட்டிக் 'காவிரிப்பூம் பட்டினம்' என்ற பெயரோடு ஒரு சிற்றூராக இன்னும் இருக்கின்றது. அன்று இந்நகரம் கரிகாலன் தலைநகரமாகச் சிறந்திருந்தது. கடற்கரையை அடுத்து எல்லா வளங்களும் நிரம்பப்பெற்று, தற்காலச் சென்னை மாநகரை ஒத்தும் மிக்கும் அழகுடன் விளங்கிய ஒரு நகரமாக அந்நகரை நமக்கு இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அந்நகரம் அரச வீதியும் வணிகவீதியும் பிற தெருக்களும் பெற்றிருந்த சிறப்புக்களையும், கடற்கரையின் அழகையும், கலங்கரை விளக்கம் போன்றவற்றின் ஏற்றத்தையும் புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். அத்தகைய பெருநகரத்தேதான் சோழன் கரிகாலன் இருந்து அரசாண்டான்.

காவிரிப்பூம்பட்டினம் தலைநகராவதன் முன்னும் பின்னும் உறையூர் சோழர் தலைநகராகவிளங்கி வந்தது. தற்போதுள்ள திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த உறையூரே அந்நகர் என்பர் ஆராய்ச்சியாளர். இவ்வுறையூருக்குக் 'கோழி நகர்' என்ற ஒரு பெயரும் உண்டு. இங்கு ஒரு யானையை ஒரு



கோழி வென்றமையான் அப்பெயர் பெற்றதென்பர். 'ஊரெனப்படுவது உறையூர்' என்ற பழமொழி அவ்வூரின் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுவதாகும். அவ்வூரின்கண் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உறுவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி என்னும் சோழ மன்னன் ஒருவன் இருந்தான். இளஞ்சேட் சென்னி எனவும் இளையோன் எனவும் இவன் அழைக்கப்பெறுதலால் இவனினும் மூத்தவன் ஒருவன் இருந்தான் எனவும், இவன் இளவரசனாகவே வாழ்ந்தான் எனவும் நினைக்க இடமுண்டு. எப்படியிருப்பினும் இவனும் சிறந்த வீரனாகவும் மன்னருள் போற்றப்படு பவனாகவும் விளங்கினான் என்பது உறுதி. இவ்விளஞ்சேட் சென்னி அழுந்தூர் என்ற நகரில் வாழ்ந்த ஒரு வேளாளர் மகளை மணம் புரிந்து கொண்டான். அக்காலத்தில் அரசர்கள் வேளாளர் குடிகளிலிருந்து தங்கள் மனைவியரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வழக்கமாயிருந்தது. எனவே இவனும் அழுந்தூர் வேளாண் மகளை மணந்து வாழ்ந்தான். இவர்கள் இருவருக்கும் பிறந்தவனே பெரும் புகழோடு விளங்கிய சோழன் கரிகாற் பெருவளத்தான்.

கரிகாலன் பிறந்தது பற்றி ஒரு கதை நாட்டில் வழங்கி வருகின்றது. கரிகாலன் தாயாகிய அழுந்தூர் வேண்மாள் பத்து மாதம் அவனைச் சுமந்து கருவுயிர்க்கும் காலத்தில் ஒரு சோதிடன் அவ்விடம் வந்தான். அவன் 'அரசியார் வயிற்றிலிருக்கும் கரு சிறிது காலம் தாழ்த்துப் பிறப்பின் நாடாளும் அரசர்க்கு அரசாக விளங்கும்' என்று கூறினான். அதைக் கேட்ட அரசியார் தனது வருத்தத்தையும்

பொருட்படுத்தாது, சிறிது காலம் கருவைத் தாங்கியிருந்து பிறகு பெற்றெடுத்தாள். இதைப் 'பொருநராற்றுப்படை' என்னும் கரிகாலனைப் புகழ்ந்து கூறும் நூல், 'தாய் வயிற்றிலிருந்து தாயமெய்தி' என்று கூறி விளக்குகிறது.

நல்ல வேளையில் பிறந்த கரிகாலன் அரசர்களுக்கு உரிய சிறப்புக்களெல்லாம் செய்யப்பெற்று நாளொரு மேனியாய் வளர்ந்துவந்தான். உரிய வயது வந்ததும் கல்வி பயின்றான். அரசர்களுக்கு வேண்டிய படைக்கலப் பயிற்சி முதலியவற்றையும் நன்கு பயின்றான் கரிகாலன். இவ்வாறு கல்வியும் படைக்கலப் பயிற்சியும் ஒரு சேரப்பெற்று, கரிகாலன் உயர்வடைந்து அரசனாகும் வயதடையு முன்பே அவன் தந்தையாகிய இளஞ்சேட்சென்னி இறந்து விட்டான். இளையனாகிய கரிகாலன் தன் தாயுடன், இரும்பிடர்த்தலையார் என்ற மாமன் மேற்பார்வையில் வளர்ந்துவந்தான்.

கரிகாலனுக்குப் பங்காளிகள் பலர் இருந்தனர் போலும். முன்னர்க் கண்ட இளஞ்சேட் சென்னியின் மூத்தவன் மக்களில் யாராவது சிலர் அரசராக முயன்றிருக்கலாம். சோழர் குடியில் தோன்றிய பலர் தத்தமக்கு நாட்டில் அரசுரிமையும் பங்கும் கிடைக்கவில்லையே என வருந்திக்கொண்டிருந்தனர் என்பர். அவருள் சிலர் அரசைக் கைப்பற்றச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர் போலும். கரிகாலன் தந்தை இறந்ததும் அவர்கள் அதுவே சரியான காலம் என்று கருதிச் சோழநாட்டைத் தம தாக்கிக் கொள்ளும் வகையில் முயற்சி செய்தனர்.



அவர்கள் யாவர்? அவர்கள் செய்த சூழ்ச்சிகள் யாவை? என்பன போன்ற விவரங்கள் திட்டமாக நமக்குக் கிடைக்கா விடினும், அவர்களது கொடுமைக்கு அஞ்சிக் கரிகாலன் தலைமறைவாக இருக்கும் அளவுக்கு நாட்டில் கலகம் விளைவித்தனர் என்பது தெரிகிறது. தன் பங்காளிகளுக்குப் பயந்து கரிகாலன் அந்த இளமைப் பருவத்திலேயே பிறந்த ஊரை விட்டுத் தலைமறைவாக ஓடிக் கருவூரின் ஒரு பக்கத்தில் தன்னை இன்னான் என்று பிறர் அறியாத வகையில் எளிமையில் வாழ்ந்து வந்தான்.

அக்காலத்தில் சோழநாட்டில் உள் நாட்டுக் குழப்பம் உண்டாயிற்று. கரிகாலன் தலைமறைவானபின் சோழ நாட்டில் பங்காளிகளில் யார் அரசனாக வருவது என்பதுபற்றி வேறுபட்ட கருத்துக்கள் தோன்றியிருக்கலாம். அல்லது அந்நாட்டு மக்கள் பங்காளிகளில் யாருமே பட்டம் பெறத் தகுதி அற்றவர்கள் என்று எடுத்துக்காட்டியிருக்கவும் கூடும். அக்காலத்தில் மக்கள் வாக்கு நன்கு மதிக்கப்பட்டு வந்தது என்பதற்குப் பலவகையான சான்றுகள் உள்ளன. எனவே, சோழ நாட்டு மக்களுக்குப் பங்காளிகளில் யாரையுமே தம் அரசனாக ஏற்றுக்கொள்ள விருப்பம் இன்மையால் குழப்பம் தோன்றியிருக்கலாம். இதுபோன்ற குழப்ப நாட்களில் அக்காலத்தில் ஒருவகை முறையினைக் கையாண்டிருக்கிறார்கள். ஒருமித்த முடிவு காணவிடத்தும், குழப்பம் மிகும் இடத்தும் அந்நாட்டுப் பட்டத்து யானையை நன்றாகக் குளிப்பாட்டி, அம்பாரி இட்டு, அதன் துதிக்கையில் ஒரு மாலையைக் கொடுப்பார்களாம். அது சென்று யார் கழுத்தில் அம்

மாலையைச் சூட்டித் தன்மேல் ஏற்றி வருகின்றதோ அவரையே மன்னனாக மக்கள் ஏற்று அரசுரிமை வழங்குவார்களாம். இந்த ஒரு முறையே சோழன் கரிகாலன் மறைந்திருந்த காலத்தே சோழ நாட்டில் நடைபெற்றது போலும்.

கழுமலம் என்பது சோழ நாட்டு ஊர்களுள் சிறந்த ஒன்று. இன்று சீகாழி என வழங்கப் பெறும் திருத்தலமே கழுமலம் என்று அழைக்கப் பெற்றது என்பர். அந்த ஊரில் இருந்த சோழருடைய யானையே தம் நாட்டு அரசனைத் தேர்ந்தெடுத்து வருவதற்காக அனுப்பப்பெற்றதாம். அந்த யானை, துதிக்கையில் மாலையோடு நேராக மேற்கு நோக்கிச் சென்று கருவூரை அடைந்தது; அங்கு ஒருபால் தன்னை இன்னான் என்று அறிவித்துக் கொள்ளாது, மறைந்து வாழ்ந்த கரிகாலன் கழுத்தில் மாலையையிட்டது; பின் அவனைத் தன்மீது ஏற்றிக்கொண்டு சோழர் தலைநகர் வந்து அடைந்தது. யானைமேல் தம் நாட்டு இளவரசனாகிய கரிகாலனே இருப்பதைக் கண்டு மக்கள் மகிழ்ந்திருப்பார்கள். பங்காளிகள் ஒரு வேளை மனம் வருந்தியிருப்பார்கள். எனினும் அந்நாட்டு முறைப்படி கரிகாலன் மக்கள் வாழ்த்த இளமையிலேயே அரசனாகிப் பட்டம் ஏற்றான். அவன் தாய் மாமனாகிய இரும்பிடர்த்தலையார் அவனுக்குப் பக்கபலமாக இருந்து அரசாட்சியை நடத்த உதவி வந்தார் என்பது பொருந்தும். இவ்வாறு கரிகாலன் யானையால் கொண்டு வரப்பெற்று அரசனாக்கப்பட்ட வரலாறு 'பழமொழி நானூறு' என்னும் நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.



கரிகாலன் இளையவனாயிருந்தும் அரசமுறை நடத்துதலில் வல்லவனாக இருந்தான். அவன் பேரும் புகழும் நாடோறும் ஓங்கி வளர்ந்து வரலாயின. அதைக் கண்டு அவனது தாயத்தார் மேலும் பொறாமை கொள்ளலானார்கள். அவனை எப்படியும் அரசபதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று சூழ்ச்சி செய்தார்கள். எப்படியோ கரிகாலன் அவர்கள் சூழ்ச்சிக்கு இலக்கானான். தாயத்தார்களும் சிங்கக் குட்டியைக் கூட்டில் அடைத்தாற்போன்று கரிகாலனைச் சிறையிடையிட்டு விட்டனர். கரிகாலன் சிறையிடை யிருந்தபோது வேறு யார் அந்நாட்டை ஆண்டார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஒரு வேளை கரிகாலன் சிறைப்பட்டதை மக்கள் அறிந்து, பகைவர்களாகிய தாயத்தார் செயலைக் கண்டிக்க முற்பட்டிருக்கலாம். அன்றித் தாயத்தாருக்குள்ளேயே யார் மன்னனாவது என்ற மாறுபாடு ஏற்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் யானையால் கொண்டு வரப்பட்ட மன்னனாகிய கரிகாலனைச் சிறையிடைத் தள்ள மக்கள்மனம் விரும்பவில்லை. அவனை உடனே வெளிக்கொணர்ந்து மறுபடியும் மன்னனாக்கவே மக்கள் முயன்றிருப்பார்கள். தங்கள் சூழ்ச்சியும் எண்ணமும் வெற்றி பெறாததைக் கண்ட தாயத்தார் செய்வதறியாது கரிகாலனையே கொல்லச் சதி செய்தனர். அவன் இருந்த சிறைக் கோட்டத்திற்குத் தீவைத்தனர். சிறை தீப்பற்றி எரியின் உள்ளிருக்கும் கரிகாலனும் ஒழிவான்; பிறகு நாடு தம் வசமாகும் என அவர்கள் எண்ணியிருப்பார்கள் போலும். பாவம்! அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. கரிகாலன் தப்பிப் பிழைத்தான்.

சிறையில் வாடிய கரிகாலனுக்கு அவ்வப்போது பிறர் அறியாதபடி அவன் மாமன் இரும்பிடர்த் தலையார் ஆறுதல் கூறிவந்தார். சிறைக் கோட்டம் தீயிடப் பெறுவதை அவர் முன்னரே அறிந்திருக்கக் கூடும். உடனே அவர் கரிகாலனை விடுவிக்க முயன்றார். எனினும் தீ சூழ்ந்துவிட்டது போலும்; தீப் பட்டுக் கரிகாலன் கால்கள் கருகின. இரும்பிடர்த் தலையார் அவனைத் தூக்கிக்கொணர்ந்து கால்களில் உள்ள புண்களை ஆற்றினார் போலும்! அவனுடைய கால் கரிந்து போனமையினாலேதான் அவன் கரிகாலன் என்று அழைக்கப்பட்டான் என்பர் ஒரு சாரார். எப்படியோ கரிகாலன் சிறையிலிருந்து தப்பிவிட்டான். 'நம் அரசன் தப்பிப் பிழைத்தான்' என்ற பெருமகிழ்ச்சியில் மக்கள் மறுபடியும் இவனை மன்னனாக்கினர். அவனும் தன் பகைவர்களை எல்லாம் தலைதூக்காவண்ணம் முறியடித்துப் பின் அரியாசனம் ஏறினான். அவன் மாமனாகிய இரும்பிடர்த்தலையார் அவனுக்கு அருகிருந்து அமைச்சன் என்னுமாறு அறிவுரைகள் கூறி ஆட்சி செம்மையுற நடத்த வழிகாட்டிக் கொண்டிருந்தார்.

## 2. ஆட்சியும் போரும்

'இளமை நாணி முதுமை எய்தி, உரை முடிவு காட்டிய உரவோன்' என்று சோழன் கரிகாற் பெரு வளத்தானைப் பாராட்டுகிறது மணிமேகலை என்னும் பெருங்காப்பியம். இதுபற்றிய ஒரு கதையையே எடுத்துக் காட்டுகிறது 'பழமொழி' என்ற ஓர் அற நூல். அதில் இரு பெரியவர்கள் இவனிடம் வழக்கை முறையிட வந்து, இவன் இளமை கண்டு திரும்ப இவன் கிழவன் வேடம் தாங்கி வந்து நீதி உரைத் தான் என்று கூறப்பட்டுள்ளது.

கரிகாலன் பட்டத்துக்கு வந்த சில காலத்துக் குள் நடந்த நிகழ்ச்சியாக இருக்கலாம் இது. ஒரு நாள், கரிகாலன் அவையை நாடி இரு குடிமக்கள் ஒரு வழக்கை உரைக்க வந்தார்கள். அவர்கள் வழக்கு சிக்கல் நிறைந்ததாக இருந்தது போலும். யாராலும் தீர்க்க முடியாத அந்த வழக்கை அரசனி டம் கூறித் தீர்த்துக் கொள்ளலாம் என்று அந்த இரு பெரியவர்களும் வந்தார்கள். அப்போது கரிகாலன் ஒரு வேலை தனிமையில் இருந்திருப்பான். பக்கலில் இருந்த யாரோ வந்த இருவருக்கும் அரசன் வயதில் இளைஞன் என்று கூறியிருப்பார். அவர்கள் 'அந்த இளைஞன் எவ்வாறு நம் வழக்கைத் தீர்க்கப் போகிறான்' என்று பேசிக் கொண்டார்கள் போலும். அது கரிகாலன் காதில் விழுந்தது. அவன் அப் பெரியவர்களை நோக்கி அவர்தம் அரசர் வயது முதிர்ந்தவர் என்றும், எத்தகைய வழக்கையும் எளி தில் தீர்ப்பவர் என்றும் கூறி, அம்மன்னரைத் தான் சென்று அழைத்து வருவதாகப் புறப்பட்டான்.

சிறிது நேரத்தில் அரசன் அத்தாணி மண்டபத்தில் இருப்பதாகப் பெரியவர் இருவருக்கும் தெரிய, அவர்கள் அரசன் முன் சென்றனர். அரசன் நரைத்த தலையுடன் இருப்பதை அறிந்து, தம் அரசன் வயதில் மூத்தவன் என மகிழ்ந்தனர்; பின்னே தத்தம் வழக்கை முறையிட்டனர். அரசன் இருவர் வழக்கையும் கேட்டான்; பிறகு ஆழ்ந்து நினைத்து வழக்குக்கு ஏற்ற வகையில் திருந்திய தீர்ப்பையும் கூறினான். தீர்ப்பை அறிந்த இருவரும் அரசனை மிகவும் கொண்டாடிப் பேசினர். இதுவரை அதுபோன்று தீர்ப்பளித்த மன்னர் இருந்ததில்லை எனக்கொண்டாடினர். அப்போது அரியணையில் இருந்த மன்னன் தன் கிழ உருவைக் கலைத்து, இயற்கையில் கொண்ட இளைஞன் உருவைக் காட்டித் தான் கரிகாலன் என்பதை விளக்கினான். வந்தவர் இருவரும் அவனது ஆற்றலையும் சிறப்பையும் அறிந்து போற்றி, அவனை 'நெடிது வாழ்க' என்று வாழ்த்திச் சென்றனர். இச்செய்தி சில இலக்கியங்களில் பேசப்படினும் பலர் கதை எனவே கொள்கின்றனர். கதையாகவே கொண்டாலும்கூட, இதில் கரிகாலன் ஆட்சித் திறத்தை விளக்கும் பொருள் நன்கு பொதிந்துள்ளதை வியவாதார் யார்?

இளைஞன் கரிகாலன் மணப்பருவம் எய்தினன். அக்காலத்து அரசர் வேளாளர் குலத்துப் பெண் கொள்ளும் வழக்கத்தை முன்பு கண்டோம். கரிகாலனும் தன் தந்தையைப் போன்று வேளாளர் குலத்தே பெண் கொண்டான். சீகாழிக்கு அருகிலுள்ள நாங்கூரில் வாழ்ந்த வேளாளர் ஒருவருடைய பெண்ணைக் கரிகாலன் மணந்து கொண்டு இல்லற



வாழ்வை மேற்கொண்டான். இந்த நாங்கூர் வேளாளர் மகளையன்றி வேறு சில மகளிரையும் கரிகாலன் மணந்திருந்தான் என ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். கரிகாலன் சிறந்த வகையில் இல்லற வாழ்வை மேற்கொண்டிருந்தான். அந்த இல்வாழ்வின் பயனாக அவனுக்குச் சிறந்த மக்கள் தோன்றினர். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்ற ஆண் மக்கள் மூவரும், ஆதிமந்தி என்ற மகள் ஒருத்தியும் அவனுக்குப் பிறந்தனர். இந்த ஆதிமந்தியாரைப்பற்றி இலக்கியங்கள் ஒரு வரலாற்றை நமக்குத் தருகின்றன.

ஆதிமந்தி தன் கணவன் சேரமன்னன் ஆட்டனத்தியோடு காவிரிக் கரையில் நீராடி மகிழ்ந்திருந்தாள். காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்தது. வந்த வெள்ளம் ஆதிமந்தியோடு ஆடிய அவள் கணவனை அடித்துச் சென்றது. அவர்கள் நீராடிய இடம் மாயவரத்துக்கு அருகில் இருந்த 'கழார்' என்ற துறைமுகம். அங்கிருந்து காவிரி வெள்ளத்திலே கடல்வரை அடித்துச் செல்லப்பட்டான் அவன். ஆதிமந்தியோ அலமரலுற்று அலறி, வெள்ளத்தை ஒட்டியே கடல்வரை கரையின் மீதே ஓடினாள்; பிறகு முறையிட்டாள். அவள் முறையீடு கேட்டுத்தானோ என்னவோ கடல் அவள் கணவனைக் கரை சேர்த்தது.

நிற்க; கரிகாலன் இவ்வாறு தன் மனைவி மக்களோடு வாழ்ந்து வருகையில் அரச காரியங்களை மறந்தான் இல்லை. திறம்பட அரசு நடத்திய மன்னன் தன் நாட்டு எல்லையை மேன்மேலும் பெருக்க

நினைத்தான். அதற்கெனத் தன் படையைப் பலப் படுத்தினுன். ஒரு பேரரசனுக விளங்குதற் கேற்ற நல்ல ஆற்றலும் மன உரமும் பெற்றதோடு, மதி சான்ற அமைச்சர்களேயும், வலி பெற்ற படையை யும் கரிகாலன் பெற்றிருந்தான் என்பதும் விளங்கு கிறது.

சோழ நாடு தன் எல்லேயில் அவ்வ ளவு விரிவாக இருந்தது என்று சொல்வதற்கில்லே. கரிகாற் பெருவளத்தான் காலத்தில்தான் அது மிக வும் விரிவடைந்தது. அவன் காலத்துக்குப் பிறகும் அது தன் எல்லேயில் சுருங்கி விட்டது. தமிழ் நாட்டு மூவேந்தருள் ஒருவர் சிறந்திருந்த காலத்தில் மற் றைய இருவரும் வலி குறைந்தே இருந்தனர். கரி காலன் காலத்தில் பாண்டி நாடும் சேர நாடும் வலி குன்றியிருந்தன என அறிகின்ருேம். கரிகாலன் பிற்காலத்தில் சேர மன்னரோடு மகள் கொடுத்தும் கொண்டும் நட்பாளனுக இருந்தான் என்று தெரிகின்றது. ஆனுல் அவனது ஆட்சித் தொடக்கத்தில் சேரரும் பாண்டியரும் கரிகால னுக்கு விரோதிகளாவே இருந்தனர். அவருடன் இவன் செய்த முதற் போரே சிறந்ததாக விளங் கிற்று. சேரனும் பாண்டியனும் வேளிர் முதலிய ஒன்பது குறுநில மன்னர்களேச் சேர்த்துக் கொண்டு, கரிகாலனேடு போருக்குப் புறப்பட்ட னர். கரிகாலன் அவர்கள்மேல் வலுவில் தானு கவே சென்று போர் தொடுக்கவில்லே என்று தெரி கின்றது. இவனுடைய புகழையும், அரசியல் சிறப் பையும் கேள்வியுற்ற மற்ற இரு பெருமன்னர்களும் தாங்களே புறப்பட்டு, மற்றவரையும் கூட்டிக்



கொண்டு, இவன் எல்லேயிலே வந்து வலியப் போருக்கு அழைத்திருக்கிருர்கள். குகையில் தூங் கும் சிங்கத்தைத் தட்டி எழுப்பி வலுச் சண்டைக்கு அழைப்பதுபோலாயிற்று அவர்கள் நிலே. அவர்கள் போரிட்ட இடம் தஞ்சாவூரைச் சார்ந்த வெண்ணி என்பதாகும். அப்போரில் பங்குகொண்டவன் சேர மான்பெருஞ் சேரலாதன் எனத்தெரிகின்றது. பாண் டியன் பெயரும் மற்றவர் பெயரும் தெரியவில்லே. அவர்கள் அனேவரையும் வெண்ணிப் போர்க் களத்தே ஒரு சேரத் தோற்கடித்தான் கரிகால் வளவன். இவனது முதற் போரின் வெற்றியைக் குறித்துப் புலவர்கள் சிலர் பாராட்டியுள்ளனர். அவ ருள் வெண்ணிக் குயத்தியார் பாடிய பாட்டின்மூலம் இவன் பகைஞுனை சேரமான் பெருஞ் சேரலா தன் வடக்கிருந்து உயிர் துறந்தான் என அறிகி ருேம். அவன் மார்பைக் குறித்துக் கரிகாலன் விடுத்த அம்பு, அவனது மார்பைத் துளேத்து முதுகு வழியாக அப்புறம் சென்றது. முதுகில் புண் உண் டானமையால் அது புறம் காட்டி ஓடலுக்கு அடை யாளம் என்று கருதி அவன் அந்த அவமானத்தால் வடக்கிருந்து உயிர் துறந்தான் போலும். இவ் வெண்ணி, தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தி லுள்ள ‘கோயில் வெண்ணி’ என்று கூறுவர் ஆராய்ச்சியாளர்.

இவ்வாறு வலிய வந்த முதற்போரே கரிகால னுக்கு வெற்றி மாலேயும் புகழ் பாடலும் தேடித் தந் தது எனின் அவன் சிறப்பு மேலும் வளரக் கேட்க வேண்டுமோ? சேரன் வடக்கிருந்து உயிர் துறக்க, பாண்டியனும் மற்றைக் குறுநில மன்ன

ரும் மறைந்து ஓடிவிட்டார்கள் போலும். மறைந்து சென்ற பின் மறுபடியும் அவர்கள் பொருமை கொண்டு கரிகாலனுக்கு எதிராகச் சதி செய்திருக்கக்கூடும். எனவே கரிகாலன் வாளாவிராது மேன்மேலும் பகைவர் நாடுகளை நோக்கிப் படையெடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. தன் படையை நன்கு பெருக்கிக்கொண்ட சோழன் கரிகாற் பெருவளத்தான் தான் தனியாகவே பெரும் படையைத் திரட்டிக்கொண்டு பகைவர் மேற் சென்றான். வாகை என்னுமிடத்தில் ஒன்பது சிற்றரசர்கள் வந்து அவனை எதிர்த்தனர். எதிர்த்தவர் அனைவரையும் ஒரே நாளில் தோற்றோடுமாறு போர் செய்து அவர்களை வென்றார். எதிர்த்த மன்னர் ஒன்பதின்மரும் தங்கள் சேனையும் செருக்கும் ஒரு சேர அழியத் தத்தம் வெண்கொற்றக் குடைகளைப் போர்க்களத்திலே விட்டு ஓடி மறைந்தனர்.

இவ்வாறு மறைந்து நின்று பகைவர் கலகம் விளைக்கின்றதை அறிந்த கரிகாலன் பகைவர்களை அடியோடு வேரறுத்தாலன்றி நாட்டில் அமைதி காண முடியாது என உணர்ந்தான். உணர்ந்து, தன் அண்டை நாடுகளில் உள்ள அரசர்கள் தன் மேல் மேலும் படையெடா வண்ணம், தானே முன்சென்று அந்நாடுகளை வெற்றி கொள்ளல் நலமெனக் கருதினான். எனவே, அவன் படைகள் மகிழ்ச்சியோடு போர்க்களங்களை நாடிப்புறப்பட்டன. சோழனது பெரும்படை வடக்கு நோக்கிப் புறப்பட்டது. சோழ நாட்டுக்கு வடக்கே உள்ள நாடு தொண்டை நாடு என்பதை அறிவோம். தொண்டை நாடு இன்றிருப்பது போன்று வளர்



நிறைந்த பெருவள நாடாக இல்லை. எங்கும் காடு அடர்ந்த நாடாக அது இருந்திருக்க வேண்டும். அதில் குறும்பர் என்ற காடு வாழ் மக்கள் கொள்ளையும் கொடுமையும் செய்து வாழ்ந்தார்கள் போலும். ஆயினும் இன்றிருக்கின்ற 'காஞ்சி நகர்' அன்றும் அந்நாட்டுத் தலைநகராக விளங்கிற்று. அந்நாட்டை அருவா நாடு, அருவா வட தலை நாடு என்று அக்காலத்தே இரு பிரிவாகப் பிரித்திருந்தனர். இரண்டினுக்குமே காஞ்சி தலைநகராக விளங்கிற்று. சோழன் கரிகாலன் அந்நாட்டின்மீது படையெடுத்து எளிதில் அங்கு வாழ்ந்தவரை அடக்கி, நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். அந்நாட்டில் வாழ்ந்த குறும்பர்களை ஓட்டினான். காடுகளை அழித்து நாடாக்கினான். நாட்டை வளப்படுத்த வேளாளர்களைக் கொண்டுவந்து குடியேற்றினான். அவர்களே இன்று தொண்டை நாட்டில் வாழும் வேளாளர்களாவர். அவர்களைக் குடியேற்றினதோடு அமையாது, அவர்கள் வேளாண்மைக்குத் தேவையான நீர்ப்பாசன வசதி முதலியவற்றையும் அமைத்துக்கொடுத்தான். மற்றும் இத் தொண்டை நாட்டையே இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்தான். அக்கோட்டங்கள் இன்றும் அப்பெயர்களால் வழங்கப் பெறுகின்றன.

நாட்டைச் சீராக்கிய கரிகாலன் தலைநகராகிய காஞ்சிபுரத்தையும் செப்பனிட முயன்றான். கச்சியிலே மிகப் பழைமையாகப் போற்றப்படுவது காமகோட்டம் என்னும் காமாட்சி அம்மன் திருக்கோயிலேயாகும். இன்றும் அக்கோயில் காஞ்சி நகருக்கே நடுநிலையாக நின்று, பலரும் போற்றக் கூடிய வகை

யில் மேன்மையுற்றிருக்கின்றது. அக்கோயிலைக் கரிகாலன் புதுப்பித்துச் செம்மைப் படுத்தினான். அக்காலத்தில் அறவோரும் துறவோரும் பலர் அக்கோயிலில் தங்கி வாழ்ந்து வந்தனர். அவருள் ஒருவர் சாத்தனார் என்பவர். அவர் அக்கோயிலின் காவலை மேற்கொண்டு அறவழியில் வாழ்ந்து வந்த பெரியார். சோழன் கரிகாலன் அங்கு வந்து காமகோட்டத்தில் அறப்பணி செய்வதைக் கண்ணாற் கண்ட சாத்தனார் மிகவும் மகிழ்ந்தார். அவரிடம் செண்டு என்ற ஒருவகை ஆயுதம் இருந்தது. அச் செண்டு தன்னிடம் இருப்பதைக் காட்டிலும் கரிகாலன் போன்ற சிறந்த வீரனே அதைத் தாங்கத் தகுதியுடையவன் என்பதை உணர்ந்தார். எனவே காமகோட்டத் திருப்பணி செய்த அக்கரிகாலனை வாழ்த்தி, அச்செண்டு என்னார் ஆயுதத்தை அவனுக்குக் கொடுத்தனர். கரிகாலன் வடநாட்டின் மேற் படையெடுத்துச்சென்று இமயம் வரை வெற்றிகொண்டு, மேலே செல்ல விரும்பிய காலத்தில் இமயம் குறுக்கிட்டதால் சினந்து அச்செண்டாலேயே இமயத்தை அடித்தான் என்று சிலப்பதிகார உரைமேற்கோள் செய்யுள் ஒன்று குறிக்கின்றது. சோழர் புகழ்பாடும் கலிங்கத்துப் பரணியும் இவ் வரலாறு பற்றிப் பாடுகின்றது.

தொண்டை நாடகிய அருவா நாட்டைத் தன்னடிப் படுத்திய பின் கரிகாலன் மேலும் வடக்கு நோக்கிச் சென்றான். தமிழ் நாட்டு எல்லையாகிய வேங்கடமலை வரையில் அவன் படை சென்றது. அங்கு வடவர் என்னும் தெலுங்கு வகுப்பார் வாழ்ந்தனர். வடுகு என்னும் தெலுங்கு மொழி அவர்கள்



மொழியாகும். அங்கே சிற்றரசர்கள் சிலர் கரிகாலனை எதிர்த்திருப்பர் போலும்; எதிர்த்த அனைவரையும் வெற்றி கொண்டான். பின்னர் அவன் வந்த வழியே திரும்பித் தென் பெண்ணை ஆற்றங்கரையை அடைந்தான். அப்பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு, மலையமான் பரம்பரையிலுதித்த மன்னர்கள் ஆண்டு வந்தனர். அம்மலையமான் சோழரின் கீழ்ச் சிற்றரசனாக இருந்தான். அவனுடன் சிலநாள் கரிகாலன் தங்கியிருந்து அவனுக்குப் பெருமை யளித்துப் பின் தன் நாட்டுக்கு வந்து சேர்ந்தான்.

சோழ நாட்டுத் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் சிலகாலம் தங்கியிருந்தான் கரிகாலன். சோழன் பிறந்தபோது உறையூர் சோழநாட்டின் தலைநகராக இருந்தது என அறிந்தோம். பின் கரிகாலன் காவிரிப்பூம் பட்டினமாகிய புகார் நகரைத் தலைநகராக்கிக் கொண்டான் போலும். எப்போது அதைத் தலைநகராக்கினான் என்பது விளங்கவில்லை. அப்புகார் நகரம் கரிகாலனுக்கு முன்பே சோழ நாட்டின் துறைமுகப் பட்டினமாகச் சிறந்திருந்த ஒன்றாகும். எனினும் கரிகாலன் காலத்தில் அது வளம் பெற்றுச் சிறப்புற்றிருந்தது போன்று வேறு எக்காலத்தும் அவ்வளவு சிறப்பாக இருந்ததில்லை என்பது ஆராய்வார்க்கு நன்கு புலப்படும். கரிகாலன் தான் பட்டத்துக்கு வந்ததும் இத்துறைமுகப் பட்டினத்தைச் சிறப்புறச் செய்திருக்கவேண்டும். பட்டினம் என்றாலே இன்று சென்னைப் பட்டினத்தைக் குறிப்பது போன்று, அன்று பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினத்தையே குறித்தது. இப்பெருநகர்

காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் மாயவரத்துக்கு வடகிழக்கே கடற்கரையிலிருந்த ஒரு பெரு நகராக விளங்கியது. இதன் புகழைப்பற்றிக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற சங்க காலப் புலவர் அழகாகப் 'பட்டினப்பாலை' என்னும் நூலில் பாடியுள்ளார். அச்சிறப்புக்களைப் பற்றிப் பின்னே காண்போம்.

இத்தலைநகரில் கரிகாலன் சில நாள் தங்கிய பின் மேலும் தனக்குப் பகையரசர் தெற்கிலும் மேற்கிலும் உள்ளனர் என அறிந்தான். உடனே அந்த இரு பக்கங்களிலும் சென்று வெற்றி காண விரும்பிற்று அவன் உள்ளம். எங்கும் தனக்குப் பகைவன் இல்லையாகச் செய்யவேண்டும் என்பது அவன் உள்ளக் கிடக்கை. தெற்கு நோக்கி அவன் சேனை புறப்பட்டது. முதலில் அவன் படை நாகப்பட்டினத்தை அடுத்த பன்றி நாட்டின் மேல் சென்றது. இந்நாடு பாண்டிய சோழநாடுகளுக்கு இடைப்பட்ட நாடு போலும். இப்பகுதியை நாகர் என்ற ஒரு வகுப்பார் ஆண்டு வந்தனர். அவர்தம் பட்டினமே நாகப்பட்டினம் எனப் பெயர் பெற்றது போலும். அந்த நாகரை வெற்றி கொண்டான் கரிகாலன்; பிறகு பாண்டி நாட்டின்மேல் படையெடுத்தான். அக்காலத்தில் பாண்டி நாட்டில் ஆண்ட மன்னன் யாவன் எனத் தெரியவில்லை. ஆயினும் அந்நாடு பாண்டி நாடு, தென் பாண்டி நாடு என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என அறிகின்றோம். கரிகாலன் இந்த இரு பகுதிகளையுமே வென்று தனதாக்கிக்கொண்டான்; பாண்டி நாட்டில் அமைதி கண்ட பிறகு மேலைக் கடற்கரை வழியே சென்றான். சேரமான் பெருஞ்சேரலாதன் முன்னரே



வெண்ணிப் பறந்தலையில் இவனோடு போர் செய்து வடக்கிலிருந்து உயிர் விட்டதை அறிவோம். எனவே இவன் சேரநாட்டுக்குப் படை எடுத்துச் சென்ற போது எவரேனும் சிற்றரசர்கள் அந்நாட்டை ஆண்டிருக்கலாம். ஆகையினால் அந்நாட்டை யாதொரு எதிர்ப்பும் இன்றியே கரிகாலன் தன்னடிப் படுத்திக் கொண்டான். பின் சேர நாட்டின் வடக்கே அமைந்திருந்த பூழி, குடம், குட்டம், கற்கா, வேணாடு முதலிய நாடுகளை வென்றான். பின் பொதுவர் வாழும் முல்லை நில மன்னனையும், இருங்கோவேள் என்ற வேளிர் குல மன்னனையும் பொருது வென்றான். இவற்றுடன் இவனது தமிழ் நாட்டுப் போர் முற்றுப் பெற்றது என்னலாம். ஆம். அக்காலத்தில் அது வரை தமிழ் வழக்கத்தில் இருந்தது.

தமிழ் நாட்டைத் தன்னடிப் படுத்தி, நாடு முழுவதிலும் நலம் பரப்பிய கரிகாலன் சில காலம் தன் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து தங்கியிருந்தான். இக்காலத்தே மீண்டும் இவன் தன் நாட்டை வளப் படுத்தினான் என்று சொல்ல வேண்டும். போர் மேற் சென்றாலும்கூட, இடையிடையே கரிகாலன் தன் நாட்டுத் தலைநகரில் வந்து தங்கி, செய்ய வேண்டிய சிறப்புக்களை வழுவாது செய்தான் என்று கொள்ளுதலே பொருத்த முடையது. கரை புரண்டு வரும் காவிரியின் வெள்ளப் பெருக்கை யெல்லாம் கரிகாலன் தடுத்துக் கரை கட்டி, அந் நீரினை நிலத்தை வளப் படுத்தப் பயன் படுத்தினான் என்றெல்லாம் அறிகின்றோம். எனவே கரிகாலன் ஒரே போர் வெறி பிடித்த மன்னன் என்று எண்ணுதல் பொருந்தாது. தன்னை மதியாத மன்னர் யாவ

ராயினும் அவரை எதிர்த்து முறியடித்துத் தன் புகழை நிலை நாட்டிய கரிகாலன், அதே சமயத்தில் தன் நாட்டுக் குடி மக்களுக்கு வேண்டிய நலத்துறைகளை யெல்லாம் ஆராய்ந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்தான் என்பது அவனைப் புலவர்கள் பாராட்டிய பாடல்களிலிருந்து நன்கு அறியக் கிடக்கின்றது.

தமிழகம் முழுவதும் தன்னடிப் படுத்திய கரிகாலன் சிறிது காலம் தலைநகரில் தங்கியிருந்தான்; அக்காலத்தில் வடநாட்டில் இருந்து வந்த ஒற்றர் மூலம் தனக்குப் பகைவர் வட நாட்டிலும் உள்ளனர் என அறிந்திருந்தான். உடனே தன் படையை வட நாடு நோக்கிச் செலுத்தினான். எனினும், அவன் எதிர் பார்த்தபடி அங்கே அவனுக்குப் பகைநர் இல்லை. அவனது தமிழக வெற்றியும் சிறப்புக்களும் வட நாட்டு மன்னர்களுக்கு முன்னரே தெரிந்திருக்கக் கூடும். எனவே அவனை எதிர்க்க யாவரும் அஞ்சினர். வழியிடையிருந்த பெரு மன்னரெல்லாம் கரிகாலனை ‘வருக’ என்று வரவேற்றார்கள். யாதொரு எதிர்ப்பும் போரும் இன்றிக் கரிகாலன் இமயம் வரை சென்றுவிட்டான். அதற்கிடையில் எத்தனையோ மாதங்கள்-ஏன்-ஆண்டுகள் கூடக் கழிந்திருக்கும். இன்று நாம் செல்வது போன்று இமயத்திற்கு அன்று அவ்வளவு எளிதாகச் செல்ல முடியாதே! எப்படியோ இமயம் வரை சென்ற கரிகாலன் மேலும் மேலும் தன் புகழை நாட்ட வடக்கு நோக்கிச் செல்ல விரும்பினான். எனினும் இமயம் குறுக்கிட்டது. யாரும் குறுக்கிடாது வரவேற்று வழியனுப்பிய நிலையில், மேலும் செல்ல வொட்டாது இமயம் தடுப்



பதை எண்ணிச் சீற்றமுற்றான் கரிகாலன். காஞ்சியில் சாத்தனார் கொடுத்த செண்டு என்னும் ஆயுதம் தனக்குப் பயன்படாமலே இருந்ததை அறிந்தான். உடனே அச்செண்டை எடுத்து இமயத்தின் மேல் வீசி எறிந்து அதன் முன் நிற்கவும் கூசினவனாகித் தெற்கே திரும்பினான்.

சென்ற வழியே கரிகாலன் திரும்பவில்லை என நினைக்கவேண்டியுள்ளது. சற்றுக் கிழக்கிலோ அல்லது மேற்கிலோ அவன் திரும்பிய வழி திசை மாறியிருந்திருக்கும். வரும் வழியில் சோணை யாற்றங் கரையில் தங்கினான் கரிகாலன். வச்சிர நாடாகிய அந்நாட்டு மன்னன் கரிகாலன் நண்பனல்லன்; பகைவனுமல்லன். எனினும் வந்தவரை வரவேற்றல் கடன் என்று கருதி, தனது புது நட்பின் அடையாளமாகக் கரிகாலனைக் கண்டு அளவளாவித் தன் முத்துப் பந்தரைத் திறையாகக் கொடுத்தான். அதைப் பெற்று மகிழ்ந்த கரிகாலன் சில நாள் அங்கே தங்கிப் பிறகு தன் பயணத்தைத் தொடங்கினான். வச்சிர நாட்டை விட்டுப் புறப்பட்டு வந்து மகத நாட்டு எல்லையை அடைந்தான் கரிகாலன். அந்நாட்டு மன்னனாகிய மகத வேந்தன் இவனோடு மாறுபட்டுப் போர் விளைத்தான். இவனது ஆற்றல் அறியாது மலைத்த மகத மன்னன் தோற்கடிக்கப் பட்டான். தன் தோல்வியை ஏற்றுக்கொண்டு அம் மன்னன் கரிகாலன் மகிழுமாறு நவரத்தினங்கள் இழைத்த ‘பட்டி மண்டபம்’ ஒன்றைப் பரிசாக அளித்து வணங்கினான். பட்டி மண்டபம் என்பது புலவர்கள் உண்மையை நிலைநாட்ட உட்கார்ந்து ஆராய்ச்சி செய்யும் ஒரு மண்டபம் என்று தெரி

கின்றது. அத்தகைய பெரு மண்டப அமைப்பினைச் சிறியதாக அழகுபட நவரத்தினங்கள் இழைத்துச் செய்த ஒன்றாக இது அமைந்திருக்க வேண்டும். அவ்வுயரிய மண்டபத்தைப் பெற்ற கரிகாலன் மேலும் தன் பயணத்தைத் தொடங்கி அவந்தி நாடு வந்தடைந்தான். அந்நாட்டு மன்னன் முன்னரே கரிகாலனுக்கு அறிமுகமான நண்பன். அவன் தன் நண்பனை வரவேற்றுச் சிறப்புக்கள் பல செய்து, சில நாட்கள் தன்னாட்டில் இருக்க வைத்தான். நாடு நீங்கி நாட்கள் பல ஆயினமையின் கரிகாலன் விரைந்து தன் நாடு நோக்கிப் புறப்பட விரும்பியதை அறிந்த அவந்தி மன்னன் அவனுக்கு மணிகள் இழைத்த தோரணவாயிலைக் கையுறையாகக் கொடுத்து வழியனுப்பினான். வடநாடு சென்று நாட்பல கழிந்த பின், கரிகாலன் தன் தலைநகருக்கு வெற்றியோடு திரும்பி வந்தான். காவிரி நாட்டு மக்கள் தம் வெற்றி வேந்தனைப் பெருமகிழ்ச்சியோடு வரவேற்றனர். தன் தலைநகரில் சில நாள் தங்கி நாட்டின் நலனில் கருத்திருத்திப் பல பணிகள் புரிந்தான் கரிகாலன்.

சில நாட்கள் தலைநகரில் தங்கிய காலத்துச் சிங்களம் நோக்கிப் படையெடுக்கவேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்து எழுந்தது. இமயம் வரை எவரும் எதிரில்லை என வெற்றி கண்ட பெருவேந்தன் அண்மையிலுள்ள சிறு தீவை வெல்லக் கருதுவது இயற்கையே! இந்நிலையில் சில நாள் ஓய்வு கொண்டபின் இலங்கை நோக்கித் தன் படையைச் செலுத்தினான் கரிகாலன். அங்கு அப்போது முதலாம் கயவாகு என்ற சிங்கள மன்னன்



ஆட்சிபுரிந்துகொண்டிருந்தான். மிக விரைவில் கரிகாலன் அம்மன்னனைப் பொருது வெற்றி கண்டான். அந்த நாளில் அங்கிருந்து சிலரைச் சிறை கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. இனி அமைதியாக நாட்டிலிருந்து காவிரிக்குக் கரையமைத்து வளம் கொழிக்கும் நாடாகச் சோழ நாட்டைச் செய்யவேண்டுமென நினைத்தது அவன் உள்ளம். காவிரிக்குக் கரை கட்ட ஆட்கள் தேவையன்றோ! அப்பணிக்காக அவன் இலங்கையிலிருந்து பன்னிரண்டாயிரம் பேரைச் சிறை செய்து தன்னாட்டுக்குக் கொண்டு வந்தான். அவர்களாலேயே காவிரிக்குக் கரையமைத்து நாட்டை வளப்படுத்தி 'வளவன்' என்ற பெயரையும் பெற்றான் கரிகாலன்.

## 3. வளமும் வாணிபமும்

தமிழ் நாட்டின் பொற்காலம் என்பது கடைச் சங்க காலம்தான் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். எனவே அக்காலத்தில் தமிழர் தலைசிறந்த நாகரிகத்தில் சிறக்க வாழ்ந்திருந்தார்கள் என்னலாம். அவர்கள் வாழ்வை விளக்கப் பல நிகழ்ச்சிகளும் பிறவும் நம்முன் நிற்கின்றன. காவிரிப்பூம் பட்டினம் இன்று இல்லையாயினும் அதுபற்றி யாம் அறியும் சிறப்புக்கள் அக்கால நாகரிகத்தை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

கரிகாலன் சைவ சமயத்தைச் சார்ந்தவன் என அறிகிறோம். எனினும் பிற சமயங்களிடம் மாறுபாடோ, காழ்ப்போ கொண்டவனல்லன் அவன். அவன் காலத்தில் தலைநகரில் பல சமயக் கோயில்களும் மடங்களும் இருந்தன. சிறப்பாக அக்காலத்தில் தமிழர் போற்றி வழிபட்ட தெய்வம் முக்கண்ணை உடைய சிவபெருமான் என அறிகின்றோம். அக்கடவுளே நாடாண்ட மன்னர்களால் வழிபடப் பட்டமையின் சிறந்த முதலிடம் அக்கடவுளுக்கு ஏற்படலாயிற்று. கரிகாலன் காலத்தில் அவ்வூர்க் கோயிலுக்குச் செய்த சிறப்புக்களைத் தொகுத்துச் சாத்தனார் தம் மணிமேகலையில் எடுத்துக் காட்டுகின்றார். இச்சாத்தனார் பௌத்த சமயத்தவர் எனினும் அங்கு உள்ள எல்லாக் கோயில்களையும் ஒப்பப் பாராட்டுகின்றார். நுதல்விழி நாட்டத்து இறையோனாகிய அம்முழுமுதற் கடவுள் தொடங்கி, பதிதோறும் வாழ்கின்ற சதுக்கப் பூதங்கள் என்று அக்காலத்தில் போற்றப்பட்ட சாதாரணத் தெய்வம் வரை அனைத்தும் வணங்கப் பட்டன என அறிகின்றோம். மேலும் பௌத்தமும் சமணமும்கூட அக்காலத்துத் தமிழ் நாட்டுச் சமயங்களுள் சிறந்தனவாகி விளங்கின. அச்சமயங்களைச் சார்ந்து துறவோர்கள் தங்கிய பள்ளிகளும் மடங்களும் பிறவும் அந்நகரில் நிறைந்திருந்தன. எனவே, கரிகாலன் காலத்து அவன் நாட்டில் பல சமயங்கள் நிறைந்திருந்த போதிலும் அவனது ஆட்சித்திறனால், யாதொரு மாறுபாடும் இன்றித் தம்முள் நட்போடு கலந்து அவை வாழ்ந்தன என அறிகின்றோம்.

கரிகாலன் தன் நாட்டை வளப்படுத்தியதைப் பற்றி முன்னரே கண்டோம். தொண்டை நாட்டைத் தன் வயப்படுத்திய கரிகாலன், அந்நாட்டில் உள்ள காடு கொன்று வளப்படுத்தி, பயிரிடும் வேளாண் குடிகளைக் குடியேற்றி, நாட்டை இருபத்து நான்கு கூறுகளாக்கிப் புரந்தான் என்று கண்டோம். ஈழ நாட்டில் படையெடுத்தக்கால் அங்கிருந்த பன்னீராயிரம் மக்களைச் சிறை செய்து கொண்டுவந்து காவிரிக்குக் கரைகட்டும் பணியில் ஈடுபடுத்தினான் என்பதையும் கண்டோம்.

காவிரியாறு மேற்குமலைத் தொடரின் குடகு நாட்டுப் பகுதியில் தோன்றி, பல மலைப் பிரதேசங்களை யெல்லாம் கடந்து திருச்சி வழியாக நுழைந்து பல கிளைகளாகிச் சோழ நாடாகிய தஞ்சாவூர் மாவட்டத்தை வளம் செய்யும் ஒரு பேராறு. அவ்யாறு பொன்னி எனவும் அழைக்கப்பெறும். தமிழ் நாட்டின் செல்வமாகிய ஆறு என்று கூறிக்கொள்ள நமக்கு அது ஒன்றே இருக்கிறது. அந்தக் காவிரி

ஆற்றில் அடிக்கடி வெள்ளம் பெருகுவது உண்டு. மேற்கு மலைத்தொடரில் தோன்றுவதால் அங்கே பெய்யும் பருவ மழையால் அடிக்கடி காவிரியில் வெள்ளம் பெருகுவதைக் கண்டால் மக்கள் மகிழா திருப்பார்களோ? மகிழ்ந்தார்கள்; எனினும், அது எல்லை கடந்து ஊர்களையே அழிக்கத் தொடங்கிய காலத்து அஞ்சி நடுங்கினர். இன்று மேட்டூர் அணையானது காவிரி நீரைக் கட்டிக் காத்துத் தேவையான போது அந்நீரை விட்டுப் பயிரிடுவதற்கு ஏற்பக் காலத்தில் உதவுகின்றது. அன்று இதுபோன்ற பேரணைகள் கிடையா. எனவே கரிகாலன் வெள்ளப் பெருக்கைத் தடுக்கவும் நீரைப் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தவும் வழிகளை ஆராய்ந்தான். காவிரியின் இரு மருங்கிலும் நெடுக உயர்ந்த கரைகள் அமைத்தால் வெள்ளத்தால் உண்டாகும் சேதத்தைத் தடுக்க இயலும் என முடிவு கட்டினான். தன் நாட்டு மக்களையெல்லாம் கரை கட்ட உத்தரவிட்டான். அவர்கள் வேலையால் கரை கட்டும் பணி முடியாது! என அறிந்தே ஈழ நாட்டிலிருந்து பன்னிராயிரம் அடிமைகளைக் கொணர்ந்து கரை கட்டும் அப்பணியில் செலுத்தினான்; அதனுடன் தன் கீழ் உள்ள சிற்றரசர்களுக்கெல்லாம் ஓலை போக்கி அவர்களையும் ஆட்கள் அனுப்பப் பணித்தான். இப்படிப் பலருடைய உதவியினாலும் உழைப்பினாலும் முதல் முதல் காவிரிக்குக் கரை கட்டிய பெருமை சோழன் கரிகாற் பெருவளத்தானையே சாரும்.

கரைகட்டியதோடல்லாமல் பலப்பல கால்வாய்களைக் காவிரியாற்று இருமருங்கிலும் வெட்டினான்



கரிகாலன். அக்கால்வாய்கள் நெடுந்தூரம் சென்று, இரு பக்கங்களிலும் உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வழிகளாக அமைந்து பயன் தந்தன. இவ்வாறு கடலொடு கலந்த காவிரி நீரைக் கரை கட்டி அமைதிப்படுத்தியதோடு, பயிர்த் தொழிலுக்கும் பயன்படுத்தினான் கரிகாலன். அதனாலேயே 'வளவன்' என்று சிறப்பாகப் பாராட்டப் பெற்றான்.

இக் கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டியது பற்றி ஒரு கதை வழக்கத்திலிருக்கிறது. காவிரிக்கரை கட்டத் தன் கீழ் இருந்த சிற்றரசர்கள் அனைவரையும் 'வருக' என ஆணையிட்டான் கரிகாலன் என்பதைப் பார்த்தோம். அந்த ஆணையை ஏற்று எல்லாச் சிற்றரசர்களும் வந்து தத்தம் பணியினைச் செய்தனர். எனினும், பிரதாபருத்திரன் என்னும் அரசன் ஒருவன் மட்டும் இவன் ஆணைக்குப் பணியவில்லை என்று தெரிகின்றது. அனைவரும் ஆணைக்கு அடங்கிக் காவிரியின் கரை கட்டும்போது பிரதாபருத்திரன் என்னும் மன்னன் மட்டும் கரிகாலன் ஆணையை ஏற்காது கரை கட்டாதிருந்தான். அமைச்சர் முதலாயினோர் அந்நிலையறிந்து அவனைப்பற்றிக் கரிகாலனிடம் விண்ணப்பித்தனர். கரிகாலனோ ஆழ்ந்து சிந்தித்து, அப்பிரதாபருத்திரன் படத்தை எழுதி வருமாறு பணித்தான். அவனுக்கு இயற்கையாக இருக்கும் இரு கண்களோடு நெற்றியில் மூன்றாவது கண் இருப்பதைப் படத்தில் பார்த்தான் கரிகாலன். உடனே அந்த மிகைக்கண்தான் அவன் தனது ஆணையைக் கடப்பதற்குக் காரணமாக அமைந்தது என்பதை உணர்ந்து கொண்டான்; உடனே தன் கையிற் கொண்டிருந்த வேலால்

அப்படத்தில் பிரதாபருத்திரனது மூன்றாவது கண்ணைக் குத்தினான். உடனே எங்கோ இருந்த அப் பிரதாபருத்திரனது நெற்றிக்கண் அழிந்து போயிற்று. அதை அறிந்த அம்மன்னன், அஞ்சி நடுங்கித் தனக்கென அளந்துவிட்ட காவிரிக்கரையைக் கட்டி முடித்தான். இது வெறும் கதையாக இருந்தாலும் இரண்டு இலக்கியங்கள் இதைப்பற்றிப் பாடிப் பாராட்டுகின்றன.

ஓர் அரசன் வெற்றி பெறுவது அவனுடைய வேலால் மட்டுமன்று. அவனுடைய வளையாத செங்கோலே வெற்றிக்குத் துணையாகும் என்று கூறி அதற்கு உதாரணமாக இக்கதையை எடுத்துக் காட்டுகின்றது இரங்கேச வெண்பா என்னும் ஓர் இலக்கியம். சோழர் பரம்பரையைப் பாட வந்த கலிங்கத்துப் பரணி என்னும் மற்றோர் இலக்கிய நூலும் இக்கதையை விளக்குகின்றது. சோழன் கரிகாலன் காவிரிக்கு இரு பக்கங்களிலும் பெருங்கரைகள் அமைத்தான் என்பதும், காவிரி நீரைக் கால்வாய்களின் மூலம் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தி நாட்டை வளமுறச் செய்து 'வளவன்' என்று பெயர் பெற்றான் என்பதும் மறுக்கமுடியா உண்மைகளாகும்.

இனிக் கரிகாலன் தன் காலத்தில் வாணிபத்தை எவ்வாறு சிறப்புறச் செய்தான் என்பதையும் காண்போம். அவனது தலைநகர் முதலில் உறையூரில் இருந்தது என்பதை முன்னர் அறிந்தோம். பிறகு அவன் தன் தலைநகரைக் கடற்கரைப் பட்டினமாகிய காவிரிப் பூம்பட்டினத்திற்கு மாற்றிக் கொண்டான். காரணம்



என்ன? வாணிபவளனைப் பெருக்குவதற்கு உள நாட்டுப் பட்டினத்தைக் காட்டிலும் கடற்கரைப் பட்டினம் சிறந்த வாய்ப்பும் வசதியும் உடையதன்றோ! இதை எண்ணித்தான் போலும் கரிகாலனும் 'புகார்' என்னும் துறைமுக நகரைத் தன் தலைநகராக்கிக் கொண்டான்.

புகார் என்னும் அக்காவிரிப்பூம் பட்டினம், கரிகாலன் அங்கு வந்து அதைத் தலைநகராக்கிக் கொள்ளு முன்பே சிறந்திருந்தது. தலைவனது அரசிருக்கையாகவும் அது மாறிவிட்டால் மேலும் வளர்ச்சி அடையக் கேட்கவா வேண்டும்? மற்றும் அப்பெருநகர் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் மிக அழகாகச் சிறந்து விளங்கிற்று. அந்நகரைப் பற்றி ஒருவாறு நாம் அறிந்து கொள்வோமேயாயின், அக்காலத்து வாணிப வளனையும் நன்கு அறிந்துகொள்ள முடியும்.

காவிரியாறு அப்புகார் நகரின் நடுவே ஓடிற்று. ஆற்றின் இரு பக்கங்களிலும் உயர்ந்த மாடமாளிகைகளுடன் அப்பெருநகரம் விளங்கிற்று. இந்திய நாட்டில் மட்டுமன்றி, மேல் நாடுகளாகிய எகிப்து, அரேபியா, கிரீஸ் முதலிய மேலை நாடுகளிலிருந்தும் சீனம், மலேயா, ஜாவா முதலிய கீழை நாடுகளிலிருந்தும் பல வணிகர்கள் அத்தலைநகரில் வந்து வாணிபத்தைப் பெருக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அந்நகரம் இரு பெரும் பிரிவாக அமைந்திருந்தது. மருவூர்ப்பாக்கம் எனவும் பட்டினப்பாக்கம் எனவும் அப்பிரிவுகள் அழைக்கப் பெற்றன. கடற்கரையை ஒட்டி மருவூர்ப்பாக்கமும் உள்ளே

பட்டினப்பாக்கமும் அமைந்திருந்தன. பட்டினப் பாக்கத்திலேதான் கரிகாலன் அரசியல் மண்டபமும், அரசிருக்கையும், பிற அரசியல் அலுவலாளர் வாழ் இடங்களும் அமைந்திருந்தன. அரண்மனையைச் சுற்றி யானையும், குதிரையும், தேரும், பிறவும் தங்கிய தெருக்களும் அவற்றைப் புரக்கும் வீரர் தம் மாளிகைகளும் அழகுற அமைந்திருந்தன. பின்னும் அரசர்க்கு உற்றுழி உதவும் அமைச்சர் முதலானோர் இருக்கையும், அரசர் தம் பொழுது போக்குக்கான இடங்களும் அமைந்திருந்தன.

இனி மருவூர்ப்பாக்கத்தை நோக்குவோம். அம் மருவூர்ப்பாக்கமே நமக்கு வாணிப வளனை விளக்கவல்ல ஒன்றாகும். இன்று நம் சென்னை நகரின் கடற்கரையிலே ஓங்கிய கலங்கரை விளக்கம் (Light House) நம் கண்முன் காட்சி அளிக்கின்றது. இதைப் போல் அன்று புகார் நகரின் கடற்கரையில் ஒரு கலங்கரை விளக்கம் ஓங்கி நின்று கடலில் மிதக்கும் கப்பல்களுக்கு வழிகாட்டியாக விளங்கி நின்றது என்பதை அறியும்போது யார்தான் வியவாதிருக்க முடியும்? அக்கலங்கரை விளக்கமே அன்றைய தமிழ் நாட்டின் கடல் வாணிபத்தை விளக்கும் பெரு விளக்கமாக அமையாதோ! இக்காலத்தைப் போன்றே அன்றும் நீர்வழிக்கொண்டு வந்த பொருள்களுக்குச் சுங்கம் வசூல் செய்யும் வழக்கம் இருந்தது. அச்சுங்கங்களை இவ்வளவு என்று அறுதியிட்டு வசூல் செய்து, அறுதியிட்ட வரியினை வாங்கியதற்கு அடையாளமாகப் பண்டங்களின் மேல் சோழர் இலச்சினையாகிய 'புலி' முத்திரையை இடுவது வழக்கம். அந்தச் சுங்கச் சாவடிக்கு ஆயத்



துறை (Custom House) என்பது பெயர். துறைமுகத்திலே பண்டசாலைகளும், கிடங்குகளும், உயர்ந்த மேடைகள் பலவும் (Docks & Piers) இருந்தன. அவற்றை யடுத்து வாணிபம் செய்த பல நாட்டு மக்கள் கூடியிருக்கும் இடங்களும் பிறவும் விளங்கியிருந்தன. இவ்வாறு இன்றைய ஒரு துறைமுகப் பட்டினத்தைப் போன்றே அன்றும் அழகார் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியிருந்தது வியப்பல்லவோ?

பட்டினப் பாலையிலே அத் துறைமுகத்தில் என்னென்ன பொருள்கள் வந்து இறங்கின என்பதுபற்றியும், மேற்கண்ட துறைமுக அமைப்பைப் பற்றியும் அதன் ஆசிரியர் அழகாக விளக்குகின்றார். கடல் வழியாகப் பல நாடுகளிலே இருந்து குதிரைகள் அங்கு இறக்குமதியாயின. மலைநாட்டிலிருந்து மிளகும், வட மலைகளிலேயிருந்து பொன்னும் மணியும் அந்நகரில் குவிந்திருந்தன. மேலை மலையிலே விளைந்த சந்தனமும் அகிற்கட்டைகளும் ஏற்றுமதிக்குத் தயாராக இருந்தன. தென்கடல் முத்தும், கீழ்க்கடற் பவளமும் வாணிபப்பொருள்களே. கங்கைக் கரையில் உண்டான பல பொருள்களும், காவிரியால் பெறும் பல்வகைப் பொருள்களும் ஏற்றுமதிப் பண்டங்களுள் இடம்பெற்றன. இலங்கையிலிருந்து உணவுப்பொருள் இறக்குமதியாயிற்று. கடாரம் என்று அன்று அழைக்கப் பெற்ற பர்மா நாட்டிலிருந்து வந்த பலவகைத் தொழிற் பொருள்களும் புகார் நகரத்தில் நிறைந்திருந்தன. கடாரம் என்பது மலேயா நாட்டின் வடகோடியிலுள்ள ஒரு பகுதி என்பர் சிலர். இன்னும்

பல நாடுகளிலிருந்து பல்வேறு பொருள்களைக் கொண்டு வந்து அங்கு இறக்குமதி செய்துவிட்டுப் பல பொருள்களை அங்கிருந்து ஏற்றுமதி செய்து கொண்டு போயினர் வெளிநாட்டவர். இப்பொருள் கள் விற்கும் கடைத் தெருக்களும் அழகாக விளங் கின. இரவு பகல் எப்பொழுதும் ஓயாத கடைவீதி கள் 'நாள்அங்காடி' 'அல் அங்காடி' என்ற பெயர் களால் அழகுற அமைந்து விளங்கின. வற்றாத வளஞ்சுரக்கும் ஒரு வாணிபத் தலமாக விளங்கிய அந்தக் காவிரிப்பூம்பட்டினம் இன்று எங்கே ?

காவிரிப்பூம் பட்டினத்தில் ஏற்றுமதி இறக்கு மதி செய்யப்பட்ட பொருள்களைப் பட்டினப்பாலை கீழ்க்கண்ட வரிசைகளால் சிறப்பிக்கின்றது.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலை பிறந்த மணியும் பொன்னும்
குடமலை பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு.
(பட். 185-193)

இந்த அடிகளையும் இவற்றை ஒட்டிய பாட்டின் மற்றைப் பகுதிகளையும் ஆராய்ந்து படிப்போர்க் குக் காவரிப்பூம் பட்டினத்தின் முழுச்சிறப்பும் நன்கு விளங்கும் என்பது உறுதி. இதைத் தவிர்த்துச்



சிலப்பதிகாரத்திலேயும் இப்புகாரில் நடந்த வாணி பப்பொருள்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அகில் தொகுதியும், கருப்பூரமும், வாசனைப் பொருள்களும், பல்வேறு ஆடை வகைகளும் சந் தனம் முதலியனவும் அங்கு வாணிபப் பொருள் களாய்ச் சிறந்தன என்பதை அறிகின்றோம்.

இவ்வாறு ஒருசேர நிலவளத்தையும் வாணிப வளத்தையும் பெருக்கிய பெருவேந்தர் அக்காலத் தில் கரிகாலனைத் தவிர வேறு யாரும் இலர் என்பது கண்கூடு. கரிகாலன் போரால் நாட்டை விரிவுபடுத் தியதோடு அமையாது, இவ்வாறு வயல் வளனையும் வாணிப வளனையும் பெருக்கியதனாலன்றோ அவன் 'பெருவளத்தான்' என்ற பெருஞ் சிறப்புப் பெயர் பெறுதற்கு உரியவனானான். இத்தகைய வீரம் விளைத்து, வளம் பெருக்கியதோடு அமையாது, கரி காலன் கலையுளம் கொண்டு தமிழ் இலக்கியம் வளர வும் பெரும் பாடுபட்டான் என்றும் அறிகின்றோம்.

## 4. கல்வியும் பண்பாடும்

திருமா வளவனாகிய கரிகாலன் ஆண்ட காலம் தமிழ் நாட்டின் பொற்காலம் என்று கூறலாம். அவன் காலத்தே நாடு செல்வத்திலும் பிற சிறப்புக்களிலும் மேலோங்கி யிருந்தது. செல்வமும் கல்வியும் நாட்டில் செழிப்புற்றிருந்தன. அவனது செல்வ நிலையினையும், நாட்டில் செல்வம் செழிக்க இக்கரிகாலன் செய்த ஏற்பாடுகளையும் மேலே கண்டோம்; வாணிபத்தையும் வேளாண்மையையும் ஒருசேர வளர்த்து வளம் பெருக்கிய சிறப்பினையும் அறிந்தோம். இனி, கரிகாலன் தமிழ் மொழி வளர்ச்சியில் கொண்ட ஆர்வத்தையும் காணல் ஏற்புடைத்தாகும்.

கரிகாலன் சிறந்த தமிழ்ப் பற்று உடையவன். தமிழ்ப் புலவர்களோடு கலந்து உறவாடுவதிலேயே காலம் கழித்தவன். அவன் வாழ்க்கையைக் காண்பவர் அவன் போர் புரிவதிலேயும், நாட்டை வளப்படுத்துவதிலேயும் காலம் போக்கினன் என்றே கூறுவர். எனினும் அவன் தமிழ் மொழியிடத்தும் தமிழ்ப் புலவரிடத்தும் கொண்ட பற்றும், அவர்கள் வழித் தமிழை வளர்த்த சிறப்பும் போற்றற்குரியன. அவன் காலத்தில் ஆடவரை அன்றிப் பெண்டிரும் நன்கு கற்றிருந்தனர். அவனே ஒரு பெரும் புலவனாக விளங்கினான் என்பது உண்மை. அவன் மகளாகிய ஆதிமந்தி அழகிய பாடல் எழுதிய வகையிலே தமிழ்ப் புலமையும் அறிவும் பெற்றிருந்தாள் என்பதை அறிகின்றோம். கணவனைக் காவிரி கொண்டு சென்ற காலத்து, அவள் செந்தமிழ்ப் பாட்டிசைத்தே தன் கணவனைக் கடலிலிருந்து மீட்டாள் என்ற வரலாறு நாடறிந்ததொன்று. மற்றும் வெண்ணிப் போர்க்களத்திலே கரிகாலனுக்கு அறிவுறுத்திய பெரும் புலவர் ஒரு பெண்ணே என அறிகின்றோம். எனவே, ஆடவரை யன்றிப் பெண்டிரும் அக்காலத்தில் சிறந்த புலமை உடையவராக விளங்கி யிருந்தனர் என்பது கண்கூடு.

சங்க காலத்தில் சிறந்த இலக்கியங்களாகப் போற்றப்படுவன பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும். இவ்விரண்டு தொகுதியில் 'பத்துப் பாட்டு' பாட்டெனத் தக்கவாறு பல அடிகளை உடையதாய் ஆழ்ந்த பொருட் செறிவுடையதாய் ஒவ்வொரு தலைவனைச் சிறப்பித்துப் போற்றி அதன் வழி அவர்தம் நாட்டை விளக்க வல்லதாய் அமைவது. அப்பாடல் பத்தனுள் இரண்டு பாடல்கள் கரிகாலனுக்கு உரியவாகின்றன.

பத்துப் பாட்டில் பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும் கரிகாலனைப் புகழ்ந்து பாடும் பெரும் பாடல்கள். கடவுளாகிய முருகனைப் புகழும் திருமுருகாற்றுப்படைக்கு அடுத்த இரண்டாவதாகப் பொருநராற்றுப்படை வைக்கப்பட்டுள்ளது. அதைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார் என்ற ஒப்பற்ற பெரும் புலவர். இப்புலவரையும் பெண்பாற் புலவர் எனக் கூறுவாரும் உளர். இவர் பாடலில் கரிகாலன் ஏற்றம் போற்றப்படுகிறது.

பொருநர் என்பார் நாடகங்களிலே பாத்திரங்களின் பெயர்களை அமைத்து நடிப்போராவர். அரசர்களிடம் சென்று நாடகங்கள் நடித்துப் பொருள்

பெற்றுச் செல்லுவது அவர்கள் வழக்கம் போலும். அவர்களை முன்நிறுத்தி, ஒரு பொருநன் மற்ருெரு பொருநனுக்குப் பொன்னும் பொருளும் பெற வழி காட்டுவான் போன்று கரிகாலன்சிறப்பை அவனுக்கு உணர்த்தி, அவனிடம் சென்று பொருள் கேட்கத் தூண்டுமாறு அமைந்துள்ளது அப்பாட்டு.

நாம் மேலே கண்ட கரிகாலன் வரலாற்றுக்குரிய பல சான்றுகள் இந்நூலில் கிடைக்கின்றன. பாட்டின் முதற் பகுதியில் அப்பொருநர் சிறப்பைப் பாடி, பின் அவன் செல்லும் வழியின் திறங்களையெல்லாம் விளக்கி, இறுதியாகக் கரிகாலன் புகழையும் அவனது காவிரி நாட்டையும் காட்டி முடிக்கின்ருர் புலவர். அப்பொருநர் கையிலே யாழ் இருந்ததாம். அந்த யாழை வாசித்தால் வழியிடைக் கொடுமை செய்து கொள்ளை கொள்ள வரும் கொடிய வேடுவர்கூடத் தமது செயல் மறந்து, வில்லும் வாளும் நிலத்தில் விழத் தம்மை மறந்து நிற்பார் என்று தமிழ் நாட்டிலே சிறந்து நின்ற அந்த யாழ் என்னும் இசை வாத்தியத்தை அழகாகக் காட்டுகின்ருர்.

பரிசில் பெற்றுவந்த பொருநன் தான் கரிகாலனிடம் செல்வதற்கு முன் இருந்த நிலையையும் கரிகாலனைக் கண்டபின்பெற்ற பெரும் செல்வத்தையும் விளக்கிக் காட்டுகிருன். கரிகாலனைக் கண்டதைத் தன் வாழ்விலே பெற்ற பயன் என்றே பாராட்டுகின்ருன் அப்பொருநன். கண்டவுடனே கரிகாலன் எப்படி அவர்களை எதிரேற்று உபசரித்தான் என்பதைக் கூறும்பொழுது, தமிழர்தம் பண்பாடாகிய விருந்து புரக்கும் பெருநிலை நம் கண்முன் நிழலாடு



கின்றது. பல நாட்கழித்தும் பிரியவேண்டிய நிலையில் அவனைப் பிரிய விரும்பாது கரிகாலன் வருந்திய காட்சியும், இறுதியாகப் பிரியும் காலத்தில் அவன் கொடுத்தனுப்பும் வரிசைகளும் ஒன்றன்பின் ஒன்ருக விளக்கப்படுகின்றன.

அப்புலவர் கரிகாலனது செல்வ வளத்தை மட்டும் கூருது, ‘அவனை முருகனை ஒத்த அழகுடையவன்’ என்று தோற்றத்தையும் பாராட்டுகின்ருர். தாய் வயிற்றிலிருந்தே தாயம் எய்திப்பிறந்தவன் என்பதையும் குறிக்கின்ருர். மேலும் கரிகாலன் பெற்ற வெற்றிகளையெல்லாம் வரிசைப்படுத்திப் பாராட்டுகின்ருர்.

‘உலகம் நிலையற்றது. எனவே வாழ்வு வேண்டாம்’ என்று நினைப்பவரும், அந்நினைவை மாற்றிக் கொண்டு ‘உலகம் வாழத்தான்’ என்று வாழ விரும்புகின்ற நிலையில் அவன் தன்னை வந்து பாடுவோருக்குப் பல வகையில், சிறப்புச் செய்ததைஇறுதியாகப் பாடுகிருர் முடத்தாமக் கண்ணியார். அக்கரிகாலன் நல்ல கறைகள் அமைந்த பட்டாடைகள் கொடுத்தானும். நல்ல பொற்கலத்தில் உணவு ஊட்டினுனும். பொற்ருமரைப் பூக்களைச் சூடுமாறு பரிசாக அளித்தானும். பாடினிப் பெண்கள் அணியத்தக்க முத்து மாலை போன்ற பல அணிகளைக் கொடுத்து உதவினுனும். பின் நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் ஏற்றிச் ‘சென்று வருக’ என்று காலின் ஏழடிப் பின் சென்று வழி விட்டானும். இத்தகைய சிறப்புக்களை எண்ணி எண்ணிப் பார்த்து அவனைப் பாராட்டுகின்ருர் புலவர்.

இவ்வாறு கரிகாலனைச் சிறப்பித்த புலவர், அவன் கொடைக்குக் காரணமாகிய காவிரி நாட்டைப் பற்றியும் பாட மறக்கவில்லை. வற்றாத வளம் கொழிக்கும் காவிரி அவர் கண்முன் நின்றது போலும். பாடலின் இறுதியில் பல அடிகளிலே காவிரியின் சிறப்பையும், நால்வகை நிலத்தின் இயல்புகளையும், பிற சிறப்புக்களையும் கூறி இறுதியாக, 'சாலி நெல் ஒன்று ஆயிரமாக விளையும் பண்பினைச் செய்யும் காவிரி ஊட்டும் நாட்டுத் தலைவனே' என்று போற்றி முடிக்கின்றார். இதனினும் சிறந்த வகையில் ஒரு புலவரால் அரசன் புகழ் பெற முடியுங்கொல் ?

கரிகாலனைப் பற்றிய மற்றொரு பாடல் பட்டினப் பாலையாகும். அதைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். பாலையின் மூலம் கரிகாலன் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தை அழகுபடப் பாராட்டிக் காட்டுகின்றார். இப்பாடல் ஒன்று இல்லையானால், அந்தப் பழம் பெரும் நகராகிய காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றி இன்று இவ்வளவு விரிவாக நாம் அறிந்து கொள்ள இயலாது. இப்பாடலில் கூறியிருக்கும் சில பொருள்கள் பற்றி மேலே கண்டோம். நகரமைப்பும், வாணிக வளனும் துறைமுகமும் அதில் பேசப்பட்டிருப்பதைக் கண்டோம். அப்பெருநகரை முன்னிறுத்திக் கரிகாலனைப் பாட விரும்பிய ஆசிரியர் தாம் கொண்ட 'பாலை' என்னும் பொருளுக்கு ஏற்ப, பொருளுக்காகப் பிரியும் தலைமகன், 'இதுபோன்ற பட்டினம் பெறினும் வாரேன்' என்று கூறும் வகையில் பாட்டை அமைத்துள்ளார்.



பட்டினப் பாலையின் பிற்பகுதியில் கரிகாலனது வெற்றி மேம்பாடு சிறப்பித்துப் பேசப்படுகின்றது. கரிகாலன் 'மலை அகழ்க்குவனே, கடல் தூர்க்குவனே, வான் வீழ்க்குவனே, வளமாற்றுவனே' ஏன்று சிறப்பித்துப் பேசப்படுகின்றான். இயற்கைகளையெல்லாங்கூடக் கட்டியாளக்கூடிய திறம் அவனிடம் விளங்கிய சிறப்பைக் காட்டுகின்றார் ஆசிரியர். ஆம்! அதுவரையில் கேட்பாரற்றுக் கடலோடு கலந்த அத்துணைக் காவிரி நீரையும் வீணாக்கா வகையில் கரையமைத்துக் கால்வாய்கள் வெட்டி, வயல்களுக்குப் பயன் படுத்திய முதல் பேரரசன் கரிகாலனன்றோ! அவன் இயற்கையைத் தகைந்தவன் எனப் போற்றப்படுவது எவ்வளவு பொருத்தமானதாகும். மேலும் முன் கரிகாலன் பெற்றதாக நாம் கூறிய பல வெற்றிகளைப் பற்றிப் பாராட்டுகின்றது இந்நூல். எனவே இந் நூலும் கரிகாலனைப் பற்றி அறியச் சிறந்த சாதனமாக அமைகின்றது.

இப் பாட்டைப் பாடிய புலவருக்குக் கரிகாலன் கொடுத்த சன்மானத்தை நாம் அறியின் அவன் புலவரிடத்துக் கொண்ட பெரு மதிப்பு நமக்கு விளங்காமற்போகாது. இப்பாடல் பாடிய உருத்திரங் கண்ணனார் இப்பாட்டுக்காகப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசாகப் பெற்றார் என்று கலிங்கத்துப் பரணி கூறுகின்றது. இவ்வாறு தன்னைப்பற்றியும், தன் தலைநகரின் பெருமை பற்றியும் ஒரு பாடல் பாடிய பெரும் புலவர்க்குப் பொன் பரிசளித்த சிறப்பினைப் பார்ப்பின் கரிகாலனது தமிழ்ப் பற்றும், புலவர்

வாய்மொழியை அவன் போற்றிய சிறப்பும் நன்கு விளங்குகின்றனவன்றோ!

இவ்வாறு இருபெரும் புலவர்களால் மட்டுமின்றி இன்னும் பலரால் கரிகாலன் பாராட்டப் பெற்றிருக்கின்றான். பெரும் காவியம் செய்த இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்திலேயும் இவன் புகழைப் பேசுகின்றார். இவன் காலத்தில் புலவர்கள் பலர் இவன் அவைக்களத்தை அலங்கரித்தனர் என அறிகிறோம். புலவர்கள் கூடிப்பேசும் ஓர் ஆராய்ச்சி மண்டபமே 'பட்டி மண்டபம்' என அழைக்கப் பெறுவது. பல்வேறு கொள்கைகளைப் பற்றி ஆராயவும், மாறுபட்ட கருத்துக்களை ஆராய்ந்து முடிவு காணவும் இப்பட்டி மண்டபங்கள் பயன்பட்டன. கரிகாலன் தன் காலத்தில் வாழ்ந்த புலவர்களையெல்லாம் பட்டி மண்டபம் ஏற்றிப் பேச வைத்தான். அவனுக்குப் பிறகும் புகார் அழியும் வரையில் அப்பட்டினத்தில் பட்டி மண்டபம் இருந்ததை மணிமேகலையில் சாத்தனார் எடுத்துக் காட்டுகின்றார்.

கரிகாலன் சிறந்த கலைஞானம் உடையவன். அவன் அவைக்களத்தே காவியப் புலவர் மட்டுமின்றிக் கலைவளர்த்த புலவர் பலரும் கூடியிருந்தனர். ஆடற்கலையில் சிறந்தவளாகிய மாதவி என்பாள் இவன் சபையில் தன் கலை நலத்தையெல்லாம் காட்டி, தன் நடனத்தை அரங்கேற்றுவித்தாள் என்றும் அறிஞர் கூறுவர்.

இவன் காலத்தை ஆராயின் கடைச் சங்க காலத்து இறுதிக் காலம் என்னலாம். எனவே சங்



112405

கத்தில் வாழ்ந்து தமிழாராய்ந்த புலவர்கள் தம் முயற்சியால் இவன் காலத்தில் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் ஓங்கிச் சிறந்திருந்தன என அறிகின்றோம். இவற்றால் கரிகாலன் போரினால் நாட்டைப் பெருக்கி, காவிரியால் வளம் பெருக்கிய தோடமையாது, தன் நாட்டில் செந்தமிழ் மணமும் கலை மணமும் கமழத்தக்க வகையில் அரும்பாடு பட்டான் என அறிகின்றோம்.

இனி, கரிகாலன் சிறந்த பண்பாடும் நல்ல அரசியல் ஞானமும் உடையவன் என்பது ஒருதலை. இவன் தன் அரசினைத் திறம்பட ஆண்ட விதத்தை விளக்கும் சில பாடல்கள் உள்ளன; கரிகாலன் ஆட்சி எதேச்சாதிகார ஆட்சியாக அமையவில்லை. அவன் நாட்டு மக்கள் அனைவரையும் கலந்தே ஆட்சி செலுத்தினான் என்பதை ஒரு வெண்பாவினால் அறிகின்றோம். ஐம்பெருங் குழு என்ற ஒன்று அவனுக்கு அரசியலை உணர்த்த, அவனது அவையில் இருந்தது என்பது நமக்குத் தெரிகின்றது. மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுபவருள் மக்கள் மன்றமும், அறம் கூறும் அந்தணரும், மருத்துவரும், நாள் முதலியன பார்த்துரைக்கும் நிமித்திகரும், நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஆராய்ந்து உரைக்கும் அமைச்சரும் ஆகிய ஐவகை அவைக்களத்தாரையும் கலந்தே கரிகாலன் தன் அரசியற் காரியங்கள் செய்தான் என அறிகின்றோம். இவ்வைந்து அவைக்களத்தாரை, 'வேந்தர்க்கு மாசனம் பார்ப்பார் மருத்தர் வாழ் நிமித்தரோ டமைச்சர் ஆசில் அவைக்களத்தார் ஐந்து' என்று சிலப்பதிகார உரை மேற்கோள் வெண்பா ஒன்று

குறிக்கின்றது. எனவே கரிகாலன் தான் சிறந்தா
னேயான போதிலும், நாடெல்லாம் கட்டியாண்ட
போதிலும், தன் எதேச்சாதிகாரப் போக்கில் ஆணை
யைச் செலுத்தாது, மக்கள் மன மறிந்தே நீதிசெய்
தான் என அறிகின்றோம்.

இனி அவன் சைவ சமயத்தைச் சார்ந்தவன்
என முன் அறிந்தோம். ஏழாம் நூற்றாண்டில்
தோன்றிச் சைவம் வளர்த்தவராகிய திருஞானசம்
பந்தர் இக்கரிகாலனைத் தமது காஞ்சிபுரத் தேவா
ரத்தில் புகழ்ந்து பாராட்டுகின்றார். அவன் சைவ
சமயத்தவரோடு மாறு கொண்டு மற்றவரைத் துன்
புறுத்தினான் என்றோ, வேறு வகையில் பிறர் சமயங்
கள் வாழத் தடையாய் இருந்தான் என்றோ கொள்ள
முடியாது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
காவிரிப்பூம் பட்டினத்திலே பலவேறு சமயங்களும்
பரவி வாழ்ந்து சிறப்புற்றிருந்ததைக் கூறும்போது,
கரிகாலனும் அவனுடைய சந்ததியாரும் அந்
நாட்டில் எல்லாச் சமயங்களும் வளர எவ்வளவு
உதவி செய்துள்ளார்கள் என்பதை உணர்கின்றோம்.

இனி, திருமாவளவன் இறுதியைப் பற்றிய ஒரு
கொள்கை பேசப்படுகின்றது. சோழன் கரிகாற்
பெருவளத்தானைப் புலவர்களும் பிறரும் திருமாவள
வன் என அழைத்தனர் என்பதை அறிந்தோம். அத்
தொடரால் புகழ் கொண்ட மன்னவன் 'குராப்பள்ளி'
யில் இறந்தான் என்று பேசப்படுகின்றான். சிறந்த
தமிழ் மன்னர்கள் மறைந்த பிறகு, அவர்களைப்பற்றிப்
பேசுகின்றவர்கள் இன்ன இடத்தில் மறைந்த
மன்னன் என்ற தொடரால் பேசியிருப்பதைக் காண்
கின்றோம். ஒரு பாண்டிய மன்னன் வெள்ளியம்



பலத்தில் இறந்தான் போலும். அவனை 'வெள்ளி
யம்பலத்துத் துஞ்சிய பெரு வழுதி' என அழைக்
கின்றனர். அதைப் போன்றே 'அரசு கட்டிலில்
துஞ்சிய நெடுஞ்செழியன்' எனக் கோவலனைக்
கொன்ற பாண்டியன் அரசு கட்டிலிலேயே விழுந்து
உயிர் விட்டதால் அழைக்கப் பெறுகின்றான். 'கரு
ஊர்த் துஞ்சிய புகழ்ச் சோழர்' என்பதும் அவ்வாறே
கருவூரில் இறந்த சோழ மன்னனைச் சேருகின்றது.
இவைகளைப் போன்றே 'குராப்பள்ளி துஞ்சிய திருமா
வளவன்' என்ற தொடரும் வழக்கத்திலுள்ளதைக்
காணும்போது திருமா வளவனாகிய கரிகாற் பெரு
வளத்தான் 'குராப்பள்ளி' என்னும் ஊரில் இறந்
தானோ என நினைக்க வேண்டியுள்ளது. திருமா
வளவன் என்ற பெயர் பெற்ற வேந்தர் இக் கரிகால
னைத் தவிர வேறு யாரும் இருந்ததாக இதுவரை
முடிவு செய்யக்கூடவில்லை. எனவே கரிகாலன்
குராப்பள்ளியில் துஞ்சியது உண்மையாக இருக்க
லாம். குராப்பள்ளி என்னும் ஊரைத் 'திருவிடைக்
கழி' என்னும் தலமாகக் கொள்ளுவர் ஆராய்ச்சி
யாளர். தமிழ் நாட்டு ஊர்களிலெல்லாம், அதிலும்
சிறப்பாகத் தெய்வத் தலங்களிலெல்லாம் 'தல
விருட்சம்' என்று ஒரு மரம் போற்றப் படுவதை
அனைவரும் அறிவர். காஞ்சியில் 'மா'வும், மதுரையில்
'கடம்பும்', தில்லையில் 'தில்லை'யும், ஆனைக்காவில்
'நாவலும்', குற்றாலத்தில் 'பலா'வும் தல விருட்சங்
கள் என்று பேசப் படுகின்றனவன்றோ! அது
போன்றே 'குரா' என்னும் ஒருவகை மரம் திரு
விடைக்கழியில் தலவிருட்சமாக உள்ளமையின்
அத் 'திருவிடைக்கழி' தான் 'குராப்பள்ளி' எனக்

கொள்ளுவர் ஆராய்ச்சியாளர். எப்படியாயினும் அக் குராப்பள்ளி துஞ்சிய வீரன் இக்கரிகாற் பெருவளத் தான் என்பது உண்மை. 'குராப்பள்ளி'யில் போர் நடந்தது பற்றிய குறிப்பு ஒன்றும் இன்மையால், இறுதி நாளில் கரிகாலன் அமைதியாக இறை வழி பாட்டில் கருத்தொன்றியிருந்து, அவ்விறைவன் த[illegible] மாகிய ஒன்றில் அமைதியான இயற்கை முடிவே எய்தினான் என்று கொள்ளல் பொருத்தமானதாகும். அவன் மறைந்தாலும் அவன் வளர்த்த தமிழ் இன்றும் அவனை நம்முன் கொண்டு வந்து நிறுத்து கின்றது. அவன் புகழ் என்றும் வாழும் என்பது உறுதி.

# சேரன் செங்குட்டுவன்

# 1. நாடும் மன்னனும்

தமிழ் நாட்டின் மேல் பகுதியில் உள்ளது சேர நாடு என்பதை யாவரும் அறிவர். தற்போது மலையாள மொழி வழங்கும் பகுதியே அன்று சேர நாடெனும் தமிழ்மொழி வழங்கும் பகுதியாக விளங்கி வந்தது. இன்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே இச்சேரர் பல வகையில் சிறந்திருந்தனர் சேரர் தம்மை வானவர் எனவும் கூறிக்கொண்டனர். தமிழ் நாட்டின் உயர்ந்த மேட்டுப் பகுதியாகிய மலை நாட்டை ஆண்டமையால் அவர்கள் அப்பெயர் பெற்றனர் என்பர். தமிழ் நாட்டு மூவேந்தர்களைப் பற்றிக்கூறும் போது சேர சோழ பாண்டியர் என்று சேரரை முதலில் வைத்துக் கூறுவதே மரபு. அவர் சேர நாடு மேலைக் கடலாகிய அரபிக் கடலுக்கும் மேற்கு மலைத் தொடர்ச்சிக்கும் இடையில் கன்னியா குமரி முதல் கொங்கணம் வரையில் பரவி யிருந்தது எனலாம். சிற்சில சமயங்களில் சேரர்கள் தற்போ தைய கோவை மாவட்டமாக உள்ள அன்றைய கொங்கு நாட்டையும் தம் ஆட்சியின் கீழ் அடக்கி ஆண்டார்கள் என அறியலாம்.

கொங்கு நாட்டின் ஒரு பகுதியிலே பழநி என் னும் தலம் இருப்பதைப் பாட வந்த அருணகிரி நாதர் 'ஆதி அந்த உலா ஆசு பாடிய சேரர் கொங்கு வைகாவூர் நாடதில், ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே' என்று பாடுகின்றார். சேர நாட்டில் ஒன்பதாம் நூற்றாண்டில் பிறந்த சேரமான் பெருமாள் நாயனார் என்ற சைவ அடியவர் 'ஆதி உலா' பாடிப் பெருமை பெற்றவர். அச்சேரர் குடி

யாண்ட கொங்கு நாட்டின் வைகாவூர்ப் பகுதி அது என்பதை அருணகிரியார் இவ்வாறு விளக்குகின்றார்.

சேர நாடு தமிழ் நாட்டின் மேற்பகுதியாக இருப்பினும் மற்றப் பகுதிகளோடு அக்கால மன்னரும் மக்களும் தொடர்பு கொண்டே வாழ்ந்து வந்தனர். சேரர் பரம்பரையினர் சோழர் பரம்பரையிலுள்ள பெண்களை அரசிகளாக மணந்து வந்த வரலாறுகள் உள. மேலும் சேர நாடாகிய இன்றைய கேரளத்தில் தமிழ் மொழி வழக்கற்று வீழ்ந்துவிட்ட போதிலும் மிகப் பழைய காலம் தொட்டு, ஏறக்குறைய பதினென்றாம் நூற்றாண்டு வரை பல தமிழ்ப் புலவர்கள் அங்கு வாழ்ந்துள்ளனர். சேர அரசர் பரம்பரையிலேயே பல தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். சேரன் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோவடிகளை அறியாதார் யார்? அவர் இயற்றிய சிலப்பதிகாரம் நெஞ்சை அள்ளும் நூலாக உலகில் போற்றப்படுகின்றதே. அவர் காலத்தில் புலவர்கள் பலர் சேர மன்னரைச் சேர்ந்து வாழ்ந்துள்ளனர். சங்க கால இலக்கியங்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தில் சேர அரசர் பெருமையே பேசப்படுகின்றது. ஒரு பரம்பரை பற்றித் தொடர்ந்து விரிவாகக் கூறும் ஒரு தொகுப்பு நூல் இப்பதிற்றுப்பத்தினும் வேறு கிடையாது. சேரர் பரம்பரையில் தோன்றிய பத்துப் பேரரசர்களைப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுதியே இந்நூல். இதில் முதலும் இறுதியும் கிடைக்கவில்லை. எனவே இடையிலுள்ள எட்டுப் பாடல்களே இன்று நமக்குக் கிடைக்கின்றன. இவற்றைப் பாடிய புலவர் வரிசையில்



பரணர் போன்ற பெரும் புலவர்களும் உள்ளனர். சேர மன்னர்களுக்குள்ளேயே பாட்டிசைத்துப் புகழுற்றவரும் புலமை மிக்கவரும் வாழ்ந்திருந்தனர்.

இடைக் காலத்திலும் சேரர் பரம்பரையினர் தமிழை வளர்த்து வந்தனர். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமான் என்ற சேர மன்னர் பாடிய ‘ஞான உலா’ சிறந்த இலக்கியமாகச் சைவர்களால் போற்றப்படுகின்றது. அதைப் போன்றே குலசேகர ஆழ்வார் என்ற கொல்லிக் காவலனாகிய சேர மன்னன் பாடிய பாசுரங்கள் நாலாயிரப் பிரபந்தத்தில் வைத்து வைணவர்களால் போற்றப்படுகின்றன. இன்னும் வெற்றிவேற்கை என்னும் நீதி நூல் பாடிய மன்னரும் சேரர் மரபினரே. இலக்கண நூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையைப் பாடியவரும் சேர நாட்டவரே. எனவே மிகப் பழங்காலம் தொடங்கிப் பதினோராம் நூற்றாண்டு வரை தமிழ் வளர்த்த புரவலர் சேர நாட்டை ஆண்டு வந்தனர். பிறகு எவ்வாறோ மொழி மாற்றம் பெற்றது. இன்று அங்குத் தமிழ் இல்லையாய் மலையாளம் நாட்டு மொழியாக மாறிவிட்டது. எனினும் இன்றைக்கும் பழைய தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்கள் அங்கு நிலவி வருவதை அறிகின்றோம். தமிழ் நாட்டிலே மிகப் பழங்காலத்தே கொண்டாடிய ஓண விழா, மார்கழி விழா போன்ற விழாக்கள் இன்று தமிழ் நாட்டிலே போற்றப்படாவிடினும், அங்கே சிறந்த வகையில் போற்றப்பட்டு வருகின்றன. மார்கழி விழாவில் திருப்பாவையும், திருவெம்பாவையும் பாடும் முறைகள் பல அங்கு இன்றும் கையாளப்பட்டு வருவதை

அறியின் மகிழ்ச்சி உண்டாகிறது. அத்தகைய தமிழ் வளர்த்த சேரர் பரம்பரையுள் தலைசிறந்த மன்னனாக விளங்கியவனே சேரன் செங்குட்டுவன்.

இச்சேரன் சிலப்பதிகாரம் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்தவன் என்பது நன்கு விளங்குகிறது. சேர வமிசத்தோரில் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்களே சேரன் செங்குட்டுவனுடைய முன்னோர்கள். மற்றொரு சேரர் பரம்பரையினரான இரும்பொறை மரபினர் சேர நாட்டின் வடபகுதியில் ஆட்சிசெலுத்தினர் என்று அறிகின்றோம். இந்த இரண்டு பரம்பரையினரைப் பற்றியும் பதிற்றுப்பத்து பாராட்டுகிறது.

சேரன் செங்குட்டுவன் தந்தையார் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன். இவனும் சிறந்த வீரனாக விளங்கியவன். இமயம் வரை படையெடுத்துச் சென்று, அதுவரையுள்ள நாடுகளைத் தன் அடிக்கீழ்ப் படுத்தினமையின் இவன் இமயவரம்பன் எனச் சிறப்புப் பெயர் பெற்றான். இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தே 'குமரியொடு வடவிமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்று இவனைச் சிறப்பிக்கின்றார். இவன் சோழர் மரபிலே பிறந்த மணக்கிள்ளியின் மகள் நற்சோணை என்பாளை மனைவியாகக் கொண்டான். இவளைத் தவிர வேறு மனைவியிருந்ததாகவும் கொள்வர் ஆராய்ச்சியாளர். நற்சோணையின் வயிற்றில் பிறந்தவர்கள் சேரன் செங்குட்டுவனும் இளங்கோவடிகளும் ஆவர். இளங்கோவின் இயற்பெயர் தெரிந்திலது. செங்குட்டுவன்



மூத்தவன். அவன் தம்பி இளங்கோ. இளங்கோ என்றால் இளைய மன்னன் என்பது தானே பொருள். எனவே செங்குட்டுவனுக்கு இவர் இளவல் என்பர். இவர் பெயர் யாதோ ? இவர் வாழ்க்கையைத் துறவு நிலையில் இருந்தே கழித்தவர். இவர் துறவியானமையைப் பற்றிய வரலாறு ஒன்று வழங்குகின்றது. அவ்வரலாற்றை இளங்கோவடிகளே தம் நூலாகிய சிலப்பதிகாரத்து இறுதியில் பத்தினித் தேவியின் வாக்காகக் கூறுகின்றார்.

நெடுஞ்சேரலாதன் ஒரு நாள் அரசவையில் வீற்றிருந்தான். அவனுடன் அமைச்சரும் பிறரும் அமர்ந்து இருந்தனர். அரசியாரும் இருந்திருப்பர். மக்கள் இருவரும்கூட இருந்தனர். அந்த வேளையில் சோதிடன் ஒருவன் சேரலாதனைக் காண வந்தான். அனைவரும் அவனை வரவேற்றனர். பல்வேறு சோதிட வகைகளைப் பற்றி ஆராய்ந்திருப்பர். இரு மக்களையும் அச்சோதிடன் நோக்கினான். மூத்தவன் செங்குட்டுவனை நோக்கினான்; திரும்பித் தம்பியையும் நோக்கினான். என்ன எண்ணினானோ, அல்லது எவ்வாறு கணக்கிட்டானோ தெரியவில்லை. ஆழ்ந்து சிந்தித்துப் பின் முடிவுக்கு வந்தவனாய் மூத்தவன் செங்குட்டுவன் இருக்க, இளையவனே சேரலாதனுக்குப் பின் அரசனாவன் என்று கூறினான். இதைக் கேட்ட அனைவரும் வியந்தனர். செங்குட்டுவனும் முகம் வாடினன். அருகிருந்த இளங்கோ அண்ணனது முகவாட்டத்தை அறிந்தார்; உடனே அரச அவையில் அனைவரும் கேட்க ஆணையிட்டார். தன் அண்ணன் இருக்கத் தன்னை அரசனாவான் என்று சோதிடன் கூறியது பொய்

என்றும், அதை விளக்கத் தான் என்றும் துறவியாகவே இருக்கப் போவதாகவும், அரச வாழ்வையும் பிறசெல்வங்களையும் விரும்பாது தனித்து வாழப் போவதாகவும் சபதம் செய்தார். உடனே துறவிக் கோலமும் எய்தினர். அண்ணனை செங்குட்டுவன் அலறி, தம்பியைத் துறவியாக வேண்டாமென வேண்டிக்கொண்டிருப்பான். மற்றவர்களும் அவ்வாறே வேண்டியிருப்பர். எனினும் இளங்கோவடிகள் தம் உறுதியைத் தளர விடவில்லை. துறவியாக எங்கோ சென்றுவிடாது சேரர் தலைநகராகிய வஞ்சியிலேயே குணவாயில் கோட்டத்துத் தங்கியிருந்து, அடிக்கடி செங்குட்டுவனைக் காண்பதாக உறுதி கூறினர் இளங்கோ. அனைவரும் அவர் துறவு நிலையைக் கண்டு வியந்தனர். அவரும் இறுதிவரை வஞ்சியின் குணவாயிற் கோட்டத்திலிருந்து அறவழி வாழ்ந்து பெரும் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றி அழியாப் புகழ்பெற்று அந்தமில் இன்பத்துக்கு அரசாள் வேந்தராயினர்.

அக்குணவாயிற் கோட்டம் என்பது தற்போது மலை நாட்டில் உள்ள தெனவும் 'திருக்குணாமதிலகம்' என்று அது அழைக்கப் பெறுகின்றதெனவும் அறிந்தோர் கூறுகின்றனர்.

நிற்க, இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனுக்குப் பின் செங்குட்டுவனே அரசனானன். சோதிடர் கூறிய சொற்கள் பொய்த்துப் போயின. சிறந்த பரம்பரையானதாலும் தந்தை இமயம் வென்ற பெருவீரன் ஆனதாலும் செங்குட்டுவனும் தன்னளவில் உலகம் போற்றும் அரசனாகப் பெயர் பெற்று விளங்கினான். இவன் இளங்கோ வேண்மாள் என்ற பெண்ணை மணந்திருந்தான். இவரன்றி வேறு மனைவியரும் செங்குட்டுவனுக்கு இருந்தார்கள் என்றும் கூறுவர். இவனுக்குக் குட்டுவஞ்சேரல் என்ற மகன் ஒருவனும் இருந்தான். செங்குட்டுவனை ஐந்தாம் பத்தால் பாடிய பரணர் என்ற பெரும் புலவர் தம் பாடலுக்குப் பதிலாக இக் குட்டுவன் சேரலையும் பல பரிசுகளுடன் ஏற்றுச் சென்றார் என்று அப்பத்தின் பதிகம் கூறுகின்றது. அவ்வாறாயின் இச்செங்குட்டுவன் மகன் சில காலம் பரணரிடம் குருகுலவாசஞ் செய்து அரியவற்றைக் கற்றுச் சிறந்தான் என்று கொள்ளப் பொருத்தமானதாகும்.



இச்சேரன் செங்குட்டுவன் இளமையிலிருந்தே வீரம் பெற்றவனாக விளங்கினான். இவன் செய்த போர்கள் பலவாகும். அவற்றுள் நாம் அறிவன மிகச் சிலவே. அவன் செய்த போர்களிலெல்லாம் மிக முக்கியமானது கண்ணகிக்குக் கல்லெடுத்து வர வட நாட்டுக்குப் படை எடுத்துச் சென்றபோது கனக விசயருடன் செய்த போரேயாகும். இதையன்றி இதற்கு முன்பும் தன் தாயைக் கங்கை நீராட்ட அழைத்துச் சென்றபோது, அங்கு எதிர்த்த வடநாட்டு அரசரோடு செங்குட்டுவன் போர் செய்துள்ளான். அவன் செய்த மற்றொரு சிறந்த போராகக் கொங்கர் செங்களத்துப் போர் குறிக்கப் பெறுகின்றது. இவைகளையன்றிக் கடல் மேல் கலம் செலுத்தியும் போர் செய்திருக்கின்றான். மேலும், தன்னுடைய மைத்துனச் சோழர்களுக்கு உதவுவதற்காக, அவர்தம் பங்காளிகளாகிய ஒன்பது சோழ

மன்னர்களோடு போரிட்டு வெற்றி கண்டுள்ளான். தவிர, அவனது ஆயுட்கால முழுவதும் செங்குட்டுவன் தளரா உள்ளத்தோடு பலருடன் போர் செய்து வென்றான் என்று காண்கின்றோம். இச் செங்குட்டுவன் இளமை வரலாற்றைப் பற்றி ஒன்றும் தெரிந்திலது. எனவே இவன் போர்ச் செயல்களைக் கண்டு கண்ணகிக்குச் செய்த சிறப்பினையும் தொடர்ந்து காண்போம்.

## 2. போர்த்திறன்

செங்குட்டுவன் செய்த முதற் போராகப் பலரால் கூறப்படுவது வடநாட்டுப் போரேயாகும். இவன் வடநாடு நோக்கி இருமுறை போர் தொடுத்து இருக்கிறான். ஆனால் இரு முறையிலும் போர் என்ற எண்ணத்திலேயே அவன் வடநாடு நோக்கிச் செல்லவில்லை என்பதை அறிய வேண்டும். தமிழ் நாட்டு வேந்தர் கூடிய வரையில் தாமாகவே படை எடுத்துச் சென்று மற்ற நாட்டைப் பாழ்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்திருக்கமாட்டார்கள். ஆனால் மாற்றான் ஒருவன் தன்னைப் பழித்துரைப்பானாயின் எவனாயினும் அவனை எதிர்த்து வென்று நாட்டை அழித்துத் தம் வீரத்தை நிலை நாட்டுவர் என்பது இலக்கியங்களால் நமக்கு விளங்குகின்றது. செங்குட்டுவன் முதலில் தன் தாயை நீராட்டுவதற்காகக் கங்கைக் கரைக்குச் சென்றான். இரண்டாவதாக அவன் கண்ணகிக்குக் கல் எடுக்க இமயம் சென்றான். இரண்டிடத்தும் வலிய வந்து வம்பு கூறிய வடநாட்டு வேந்தரை, அவர் நாட்டிற்கே அவன் சென்று பொருது தோற்கடித்தான் என்பது நன்கு புலப்படுகிறது.

முதலாவதாகத் தன் தாயைக் கங்கை நீராட்டச் சென்றான் செங்குட்டுவன். இதில் கருத்து வேறுபாடுகள் இருக்கக் காண்கிறோம். தாய் உயிருடன் இருக்கும்போது, அவள் கங்கை நீராட விரும்பிய காரணத்தால் அவளை அழைத்துச் சென்று நீராட்டி வந்தனன் என்று சிலர் கூறுவர். தன் தந்தை

இறந்த பின் உடன்கட்டையேறி உயிர் நீத்த தன் தாய்க்குப் பத்தினிப் படிமம் செய்து அதைக்கங்கையில் நீராட்டினன் என்றும் அப்போது எதிர்த்தாரை வென்றான் என்றும் வேறு சிலர் கூறுவர். முன்னவர் கூறுவதிலும் பின்னவர் கூறுவதே பெரிதும் பொருந்துவதாகும். எவ்வாறாயினும் முதன் முதல் வட நாடு நோக்கிக் கல்லைக் கொள்ள வரையில் சென்ற சேரன் செங்குட்டுவன் தன்னை எதிர்த்த வேந்தர் அனைவரையும் வெற்றி கண்டான் என்பது நன்கு விளங்குகிறது. சிலப்பதிகாரத்தில் வடநாட்டு மன்னர்கள் பலர் எதிர்க்கத் தான் தனியாகவே நின்று அப்போரில் வெற்றி கண்டு, தான் சென்ற செயலில் வெற்றி பெற்று அன்னையை நீராட்டினன் என்று விளக்கப்பட்டுள்ளது; இப்போர் பற்றித்தான் பின்னர்க் கனக விசயர் கூறி இச்செங்குட்டுவனை இழித்துரைத்தாக நாம் காண்கின்றோம்.

வடநாட்டுப் போரைப் பற்றிக் கூறிய அதே சிலப்பதிகாரத்தில் இவன் கொங்கர் செங்களத்தும் ஒரு பெரும் போர் செய்தான் என்று கூறப்பட்டுள்ளது. அக் கொங்கர் செங்களத்தே பாண்டியரும் சோழரும் பிறரும் சேர்ந்து எதிர்த்தார்கள் என்று கொள்ள இடம் இருக்கிறது.

'நும்போல் வேந்தர் நும்மொடு இகலி
கொங்கர் செங்களத்துக் கொடுவரி கயல்கொடி
பகைப் புறத்துத் தந்தன ராயினும்'

என்று கூறப்படுவதால் இவனைப் போன்றே முடியுடை வேந்தராகிய சோழரும் பாண்டியர்களும் எதிர்த்தார்கள் என்று கொள்ளலாம். அவர்தம் கொடிகளில் புலியும் (கொடுவரி), மீனும் (கயல்) இருப்பதாகக் கூறுவதால் அவர்கள் சோழ பாண்டியரே யன்றி வேறு யாராக இருக்கக்கூடும்? அவர்கள் இன்னும் சில சிற்றரசர்களை அழைத்துக்கொண்டு கொங்கு நாட்டு எல்லையில் வந்து எதிர்த்தார்கள் போலும். அவர்கள் அனைவரையும் சேரன் செங்குட்டுவன் பொருது வெற்றி பெற்றான். இது இவனுடைய இரண்டாவது போராக நமக்குக் கிடைத்துள்ளது.



இனி, செங்குட்டுவன் 'கடல் பிறக் கோட்டிய' செங்குட்டுவன் என்றே குறிக்கப்படுகிறான். எனவே இவன் கடல் வழிக் கலம் செலுத்திப் போர் வென்றவனாகவேண்டும். ஆயினும் அக்கடற் போரில் சம்பந்தப்பட்டவர் யாவர் என்று திட்டமாகத் தெரிந்திலது. அவனது மாற்று வேந்தன் ஒருவன் கடலை அரணாகக் கொண்டு வாழ்ந்தவனாதல் வேண்டும். இவன் தந்தையாகிய இமயவரம்பன் கடற் கடம்பு எரிந்தான் என்று பாராட்டப் பெறுகின்றான். முருகவேள் கடல்மேல் சென்று மாவினைப் பிளந்து சூரனை மாய்த்தது போன்று, இமயவரம்பனும் கடல்மேல் சென்று, கடம்பினைத் தடிந்து வெற்றி கொண்டான் என்று பதிற்றுப்பத்து பாராட்டுகின்றது. ஒருவேளை அந்தப் பகையரசர்களுள் யாராவது இமயவரம்பனுக்குப்பின் வந்த செங்குட்டுவனையும் பகைத்திருக்கலாம். அவனோடு செய்த போரே கடற்போராக இருக்கலாம். அப்பகைவனை அழிக்கவே கடல்மேல் தன் சேனையைச் செலுத்தி அதில் வெற்றி கொண்டான் சேரன் செங்குட்டுவன். இதனால் செங்குட்டுவன் தரைப்படை மட்டுமல்

லாது கடற்படையினையும் போர் செய்து அமரில் வெற்றி காணும் வகையில் திறம்பட வைத்திருந்தான் என்பது நன்கு புலப்படும். அவன் இதனாலன்றோ, 'கடலோட்டிய வேல் கெழு குட்டுவன்' என்றும், 'கடல் பிறக்கோட்டியவன்' என்றும் புகழப் பெறுகின்றனன்!

இப் போர்களையன்றிச் செங்குட்டுவன் மோகூர் மன்னன் பழையன் என்பானையும் வென்றான் எனவும் அறிகின்றோம். மோகூர் மன்னனாகிய பழையன் ஒரு சிற்றரசன் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். சேர மன்னன் மாற்றலரை வென்று தெற்கு நோக்கிச் சென்றபோது இப்பழையன் ஒரு வேளை பணியாது படை திரட்டிப் போர் தொடுக்க முயன்றிருக்கலாம். அவனைத்தாக்கி, இச்செங்குட்டுவன் வெற்றி கொண்டான் போலும்.

சேரன் வெற்றிகொண்ட மற்றொரு போர் வியலூர்ப் போராகும். ஆனால் இதிலும் இவன் யாரொடு போரிட்டான் என்பது திட்டமாகத் தெரியவில்லை. வியலூர் என்பதே எது எனத் திட்டமாக அறிய முடியவில்லை. 'நெய்தல் வியலூர்' எனக் குறிக்கப் படுதலால் அது கடற்கரைப் பட்டினமாக இருக்க வேண்டும். இவ்வூர் நன்னன் வேண்மானுக்கு உரியதாக இருந்த ஊர் எனக் குறிப்பர். எனினும் அதுபற்றி ஆராய்ச்சி தேவை.

அடுத்து வருகின்ற போர்ச் செயல் மிக முக்கியமானதாகும். இச் செங்குட்டுவனின் தாய் சோழன் மகள் என்று மேலே கண்டோம். எனவே இவனுக்கு மைத்துனச் சோழர் சோழ நாட்டில் வளர்ந்து பதவி



பெற்றிருக்கக்கூடும். சோழ நாட்டில் அடிக்கடி உள் நாட்டுப் போர்கள் நிகழும் போலும். கரிகாலன் காலத்தே அவன் பங்காளிகள் தோன்றி அவனைப் பட்டத்துக்கு வரவொட்டாது தடுத்த செய்திகளை மேலே கண்டோம். இங்கும் அதைப் போன்றே செங்குட்டுவன் மைத்துனனைப் பட்டத்துக்கு வரவொட்டாது அவர்தம் பங்காளிகளாகிய ஒன்பது சோழர் குடிப் பிறந்த மக்கள் தடுத்துக் கலகம் விளைவித்தார்கள் என அறிய வேண்டியிருக்கிறது. இவன் மைத்துனன் பெயர் 'கிள்ளிவளவன்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அக்கிள்ளிவளவனோடு மாறுபட்ட ஒன்பது சோழ மன்னரைச் செங்குட்டுவன் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கினான். அவன் போர் செய்தவிடம் 'நேரிவாயில்' என்னும் ஊராகும். அது தற்போதுள்ள உறையூரின் பக்கத்திருந்தது என்பர். அவ்வாறு எதிர்த்த பெரும் போரில் தனக்கு மாறாக வந்த சோழ வேந்தர் ஒன்பதின்மரையும் விரைவில் தோற்கடித்தான் செங்குட்டுவன். பின்னர் தன் மைத்துனன் கிள்ளிவளவனையே சோழநாட்டு மன்னனாக்கினான். பின் செங்குட்டுவன் காலம் வரையில் சோழ நாட்டில்அமைதி நிலவியமையின் இவனால் தோற்கடிக்கப்பட்ட சோழ பரம்பரையினர் பின்னர்த் தலைதூக்கவில்லை என்பது திட்டமாக அறியத்தக்க ஒன்றாகும்.

இறுதியாக அவன் நடத்திய போர் வடநாட்டுப் போராகும். பத்தினித் தேவியாகிய கண்ணகிக்கு இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வர விரும்பிய செங்குட்டுவன் வடநாட்டு அரசர் சிலரை எதிர்த்துப் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

வடநாட்டு அரசரில் இருவர் கனக விசயரென்பார் செங்குட்டுவனைப் பழித்துரைத்தார்கள். செங்குட்டுவன் தன் தாயைக் கங்கையில் நீராட்டச் சென்ற போது எதிர்த்துத் தோற்ற வடநாட்டு மன்னரைப் பழிக்கு முகத்தான், 'அவன் படையெடுத்தகாலையில் எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்' என எள்ளி நகையாடினர் அவ்விருவரும். செங்குட்டுவன் பத்தினித் தேவிக்குக் கல்லெடுக்க நினைத்த அதே வேளையில் இச்செய்தியும் அவன் செவிக்கு எட்டிற்று. உடனே தான் கல் கொண்டுவர இமயம் செல்ல வேண்டும் என்று ஆணையிட்டான். கண்ணகி தேவிக்கு இமயத்திலிருந்து கல் கொண்டு வரும் சிறப்புடன், தன்னைப் பழித்துரைத்த கனக விசயரை வெற்றி கொண்ட சிறப்பும் கூடும் என்று நினைத்ததில் தவறு ஒன்றும் இல்லையன்றோ! அவன் வடநாட்டுக்குப் புறப்பட்டுச் செல்வதை அந்நாட்டு மன்னருக்கெல்லாம் தெரிவிக்க வேண்டும் என நினைத்தான்: அந்நினைவறிந்த அவன் அருகிலிருந்த அழும்பில் வேள் என்னும் நல்லமைச்சன், "அந்நியநாட்டு வேந்தர்களின் ஒற்றர்கள் சேர நாட்டுத் தலைநகரில் என்றும் நீங்காது உறைகின்றனர்; ஆனமையின் ஆள் அனுப்பத் தேவையில்லை. வஞ்சிப் பெருவீதிகளிலே முரசறைந்து தான் வடநாடு நோக்கிப் பத்தினித் தேவிக்குக் கல் கொணரப் புறப்படப் போவதைத் தெருவிப்பதுவே போது" மென்று சொன்னான். அதைக் கேட்ட வேந்தனும் அது சிறந்ததே என, அமைச்சன் முரசறைய ஆணை தந்தான். முரசறைவோன் பட்டத்து யானைமேலிருந்து



தம் அரசன் வடநாடு நோக்கிப் புறப்பட இருப்பதாகக் கூறுவதை இளங்கோ வடிகள் நன்கு விளக்கியுள்ளார்.

வள்ளுவர் பெருமகன் தன் அரசன் சிறப்பையும் வீரத்தையும் ஒசேரக் கூறி, அவன் வடநாடு செல்ல நினைத்த செயலையும் விளக்கி, அவ்வாறு செல்லுங்கால் அங்குள்ள மன்னரெல்லாம் வணங்கி வரவேற்க வேண்டுமெனவும் இன்றேல் அரசு துறந்து அல்லலுற வேண்டுமெனவும் கூறிமுடிக்கும் திறம் அறிந்தறிந்து மகிழ வேண்டியதன்றோ!

இவ்வாறு முரசறைவித்த செங்குட்டுவன் பின் ஒரு நல்ல நாள் பார்த்து வடக்கு நோக்கிப் பெருஞ்சேனையுடன் புறப்பட்டான். புறப்பட்ட போது இருந்த சிறப்பையெல்லாம் இளங்கோ வடிகள் நன்கு விளக்குகின்றார். அவற்றைப் பின்னே காண்போம். வடதிசை நோக்கிச் சென்ற செங்குட்டுவன் செல்லுமிடமெல்லாம் பாடி வீடமைத்துத் தங்கிப் பின் கங்கைக் கரையைச் சார்ந்தான். வடநாட்டில் அது வரையில் ஆணை செலுத்திய மன்னரெல்லாம் செங்குட்டுவனைப் பணிந்து வரவேற்றனர். கங்கைக் கரையில் அவன் நண்பராகிய நூற்றுவர் கன்னரால் தயார் செய்யப் பெற்றிருந்த கலங்கள் அவனையும் அவன் சேனையையும் மறுகரை கொண்டு சேர்த்தன. உத்தர தேசத்தை அடைந்தான் செங்குட்டுவன். அங்குத் தான் அவனை வெல்வதாகப் பறை சாற்றிய கனக விசயர் போர் செய்யக் காத்திருந்தனர். அவர்களோடு அவ்வுத்தர நாட்டைச் சேர்ந்த உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன்,

சிங்கன், சிவேதன் முதலான அரசர்களும் சேர்ந்து போர் செய்தனர். செங்குட்டுவனும் தன் சேனைகளைப் போர்க்களத்துக்கு அனுப்பினான். அங்கு நடந்த போர் நிலையைப் பற்றி இளங்கோவடிகள் பலவாறாக விளக்குகின்றார். போர் முறையையும், போரில் மாற்றார் புறங் கொடுத்த நிலையையும் அவர் விளக்கும் திறத்தைச் சிலப்பதிகாரத்திலேயே படித்தறிதல் வேண்டும்.

போர் மிக விரைவில் முடிவுற்றது. பதினெட்டு நாழிகையில் போர் முடிந்தது. தேவாசுர யுத்தம் பதினெட்டு ஆண்டுகளிலும், இராமாயண யுத்தம் பதினெட்டு மாதங்களிலும், பாரத யுத்தம் பதினெட்டு நாட்களிலும், செங்குட்டுவன் கனக விசயர் போர் பதினெட்டு நாழிகைகளிலும் முடிந்ததாகக் கூறுவர் இளங்கோவடிகள். இவ்வாறு வீறு பேசிய கனக விசயரையும் அவருக்குத் துணை வந்த பிற வடதிசை மன்னரையும் ஒரே நாளில் வெற்றி கண்ட செங்குட்டுவன் அவர்களைச் சிறை பிடித்தான். பின் அக்கனக விசயர்தம் தலையிலேயே பத்தினித் தேவியின் படிமத்தை ஏற்றித் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்தான்.

அப் போர்க்களத்தே பகைவர் சேனை தோற்றதையும் பின் பொங்கிய நிலையையும் எடுத்துக் காட்டுகின்றார் இளங்கோவடிகள். இவ்வாறு தன்னைப் பழித்துரைத்த கனக விசயரை வெற்றி பெற்ற செங்குட்டுவன் மேலும் செல்ல விரும்பவில்லை. கங்கைக் கரையிலேயே பாடி அமைத்துத் தங்கி விட்டான். தன் தானைத் தலைவனாகிய வில்லவன் கோதையை



அனுப்பி இமயத்திலிருந்து கல்கொண்டு வரப் பணித்தான். பின் அனைவரும் புறப்பட்டு வஞ்சி வந்து சேர்ந்தனர்.

இதுதான் செங்குட்டுவனுடைய கடைசிப் போராகும். அப்போது செங்குட்டுவனுக்கு வயது ஐம்பது போலும். அடுத்தும் ஒரு போர் தொடுக்க அவனுக்கு வாய்ப்பு வந்தது. எனினும் மாடல மறையோன் அறிவுரையால் சினம் ஆறி அப்போரை ஒழித்தான் செங்குட்டுவன். தன்னை மட்டுமன்றித் தமிழ் நாட்டு வேந்தர் அனைவரையுமேபழித்துரைத்த காரணத்தால் கனக விசயர் தோளிலே கல்லையேற்றி, அவர்களைப் பிற தமிழரசர் காண வேண்டுமென்ற கருத்தினால் சோழ பாண்டியரிடத்தில் அனுப்பினான் செங்குட்டுவன். கனக விசயரைக் கண்ட சோழனும் பாண்டியனும் அவன் செயலைப் போற்றாது, பணிந்தவரை அவ்வாறு இழிவுபடுத்துவது தக்கதன்று எனப் பழித்தனர். அவர்கள் கூறியதைக் கேட்ட செங்குட்டுவன் உடனே போர் தொடங்க முயன்றான். அருகிலிருந்த மாடல மறையோன் அவன் வயதையும் அதுவரை அவன் செய்த போர்ச் செயல்களையும் விளக்கி, மேலும் மறப்போரின்றி அறவாழ்வு வாழவேண்டுமென்பதை, ,ஐயைந்து இரட்டிச் சென்றதன் பின்னும் அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும் மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை' என எடுத்துக் காட்டினர். அறிஞர்தம் அறிவுறைக்குச் செவி சாய்க்கும் அண்ணலாகிய செங்குட்டுவனும் ஆறினன். தவிர, தன்னைப் பழித்துரைத்த அக்கனக விசயரைப் பத்தினித் தேவிக்கு வழிபாடாற்றும் காலத்தில்

விடுதலை அளித்து விழாவில் கலந்து கொள்ளச் செய்து பின் அவர் நாட்டுக்கு அனுப்பி வைத்தான். இவ்வாறு இளமை முதல் இறுதி வரையில் ஒரு சிறந்த போர் வீரனாக இமயம் முதல் குமரி வரை தனக்கு மிக்காரும் ஒப்பாரும் இல்லையென்னும் வகையில் வெற்றி கண்ட தலை சிறந்த தமிழ்ப் பெரு வேந்தனாய் விளங்கியவன் செங்குட்டுவன். அவனுடன் பிறந்து, அவனுடன் ஒருங்கு வாழ்ந்த பெரும் புலவரும் துறவியுமாகிய இளங்கோவடிகள் தம் சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திலே அவன் புகழை நமக்குக் காட்டுகின்றார். அவர் வழி அவனைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள வேண்டியவற்றைக் காண்போம்.

## 3. வஞ்சி சேர்ந்த கண்ணகி

செங்குட்டுவன் வரலாற்றை அறிவதற்கு அடிப்படையாக நிற்பது சிலப்பதிகாரம் என்பதை அறிந்தோம். அதன் ஆசிரியர் அவன் தம்பியாகிய இளங்கோவடிகள் என்பதும் தெரியும். எனினும், இக்கதைக்குக் காரணமாகிய பத்தினித் தேவியைப் பற்றி அறிய வேண்டாவா? எங்கோ பிறந்து சேரன் நாட்டில் வந்து கணவனோடு கண்ணகி சுவர்க்கம் புகுந்த வரலாறு தான் சிலப்பதிகாரம். அவள் சுவர்க்கம் புகுந்ததோடு அந்தக் கதை முடிந்த போதிலும் அங்கிருந்துதான் செங்குட்டுவன் வரலாறு தொடங்குகின்றது. செங்குட்டுவன் இல்லையாயின் கண்ணகியின் புகழை இன்று நாடு அறியாது. சிலப்பதிகாரம் போன்ற நல்ல தமிழ்ப் பெருங்காப்பியமும் தோன்றியிராது. சிலப்பதிகாரம் இல்லையேல் தமிழ் நாட்டு வரலாற்றில் பல பாகங்கள் சேற்றில் புதையுண்டதாக மறைந்து போயிருக்கும். ஆகவே சிலப்பதிகாரம் கண்ணகியின் வரலாற்றை மட்டும் கூறுது அக்காலத் தமிழ் நாட்டின் நிலையையும், அதன் சிறந்த மன்னனாக விளங்கிய செங்குட்டுவனையும் நம்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றது. எனவே செங்குட்டுவனைப் பற்றிப் படிக்கும்போது கண்ணகி பற்றியும் சிலப்பதிகாரம் பற்றியும் படித்துத் தானே ஆகவேண்டும்!

தமிழ் நாட்டின் கீழ்ப் பகுதியாகிய, காவிரியால் வளம் செய்யப் பெற்ற நாடு சோழ நாடு. அந்நாட்டின் தலைநகராக விளங்கியது புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம். அந்நகர் இன்று இல்லை யாயி

னும் அதன் பெருமையைப் புகழ்ந்து பல சங்க
இலக்கியங்கள் பாராட்டுகின்றன. செங்குட்டுவன்
காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம் மணிமேகலை
என்ற இரு பெருங் காவியங்களுக்குப் பிறப்பிடமே
அந்தப் பூம்புகார் நகரம் தான். புகார் நகரில் பல
வேறு வாணிப வளன்களும் நிறைந்திருந்தன என
முன்னரே கண்டிருக்கின்றோம். வாணிப வளனைப்
பெருக்கும் நல்ல வணிகர் குலத்தில்பிறந்தவள் தான்
கண்ணகி. அதைப்போன்ற மற்றொரு பெரு வணி
கனான மாசாத்துவான் மகனாகப் பிறந்தவன் கோவ
லன். இருவரும் காதன் மனைவியும் கணவனுமாக
மணம் புரிந்து வாழ்ந்து வந்தனர்.

அந்நகரின் அழகிய கணிகையர் குலத்தில்
பிறந்தவள் மாதவி என்னும் மங்கை நல்லாள்.
அவள் அழகில் ஈடுபட்ட கோவலன் அவள் வழிச்
சென்று வாழலானான். பெற்ற பெரும் பொருளை
அவள் பொருட்டுச் செலவிட்டான். கையிலுள்ள
பொருளெல்லாம் கழிந்தன போலும். எனினும்,
மாதவி அவனை வெறுக்கவில்லை. கண்ணகியும் தன்
கணவன் தவறிழைத்தானே என்று அவனைப் பழிக்க
வில்லை. எனினும் மாதவியை விட்டுக் கோவ
லன் பிரிய வேண்டியகாலம் வந்தது. புகார் நகரில்
இந்திர விழாவானது ஆண்டுதோறும் நடைபெற்று
வரும் வசந்த விழாவாகும். அதில் பலரும்
கலந்து கொள்வர். கடற்கரையில் அமர்ந்
திருந்த கோவலனும் மாதவியும் இனிய யாழ்
மீட்டிப் பாடல்களைப் பாடினர். அப்பாடல்கள்
இரு பொருள்பட அமைய, மாதவி மாற்றான்
ஒருவன் மேல் மனம் வைத்ததாகத் தன்னை நீக்



கிப் பாடுகிறாள் எனக் கருதிய கோவலன் அவளை
அப்போதே விட்டு நீங்கினான். வீட்டுக்கு வந்து
கண்ணகியை அழைத்துக் கொண்டு இரவிலேயே
புறப்பட்டு மதுரை மாநகர் சென்று அடைந்தான்.
வழியிடை அவன் பெற்ற அல்லல் பல. நல்ல வேளை
யாகக் கவுந்தி அடிகள் என்னும் பெருமாட்டி அவர்
களுக்கு உற்ற துணையாகி வந்தார். அவர் மதுரை
யில் இடைக்குல மாதாகிய மாதரியிடம் கோவல
னையும் கண்ணகியையும் அடைக்கலப் பொருளாக
ஒப்படைத்தார். கோவலன் மாதரி வீட்டில் கண்
ணகி சமைத்தளித்த விருந்தினை உண்டான்; பின்
கண்ணகியின் காற்சிலம்பைக் கொண்டு மதுரை
மாநகரில் விற்று அதனால் பெறும் பொருள்
கொண்டு வாணிபம் செய்யக் கருதினான்; அவ்
வாறே கண்ணகியின் அழகிய காற் சிலம்பைப்
பெற்று மதுரைத் தெருக்களில் விலை கூறித் திரிய
லானான்.

'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்பது
சிலப்பதிகார மூன்று உண்மைகளுள் ஒன்று. அந்த
வினை கோவலனை அண்டிற்று. கோவலனை மட்டு
மன்று. பாண்டியனை, அவன் நாட்டை, ஏன்-அனை
வரையுமே அண்டிற்று. அரசியின் சிலம்பைக்
கவர்ந்த கள்வனான பொற் கொல்லன் ஒருவன்
கோவலன் கையில் அரசியின் சிலம்பை ஒத்த
ஒன்று இருப்பதைக் கண்டான். உடனே தன்
களவு வெளிப்படாதிருக்கும் வகையில் கோவல
னைக் கள்ளனாக்கினான். வருவதை அறியாத பாண்
டிய மன்னனும் வழக்கை நன்கு விசாரியாது கோவ
லனைக் கொல்லக் கட்டளையிட்டான். வாணிபம்

செய்து வாழ வந்த கோவலன், மதுரைத் தெருவில் வாழ்விழந்தான்; கொல்லப்பட்டான்.

தன் கணவன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டதை அறிந்த கண்ணகி அலறினாள்; செய்வது அறியாது திகைத்தாள்; அவள் கணவன் கள்வன் அல்லவே! அதை உலகறியச் செய்ய விரைந்தாள்; கணவன் கொலைப்பட்ட இடம் நோக்கிச் சென்று கண்டாள்; கதறினாள்; பின் தவறிழைத்த பாண்டியனை நேரில் கண்டு தன் கணவனது களவற்ற தன்மையையும், பாண்டியன் தவறிழைத்த கொடுமையும் காட்ட விரைந்தாள்; தனது ஒற்றைச் சிலம்பைக் கையிலே ஏந்திக் கொண்டு, பாண்டியனுடைய அரச அவையை அடைந்தாள். அவள் தோற்றத்தைக் கண்டு கொற்றவையோ, காளியோ என அனைவரும் கலங்கினர். ஆம்! கணவனோடு நிமிர்ந்து நடந்தறியாது இனிமை பொங்க மதுரை நோக்கி வந்த அதே கண்ணகி காளியாகக் காட்சியளிக்கும் நிலையில் மாறிவிட்டாள்; தன் சிலம்பில் உள்ள பரல் மாணிக்கம் என்பதை, கோவலன் கொண்டு வந்த சிலம்பின் மூலம் விளக்கிக் காட்டினாள். தன் தவறு உணர்ந்த பாண்டியன் அப்படியே அரச கட்டிலில் வீழ்ந்து உயிர் விட்டான். அவன் அருகிருந்த பாண்டிமாதேவியோ 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று உடன் மாய்ந்தாள்.

பாண்டியன் மாய்ந்த பின்பும் கண்ணகி சீற்றம் தணியாதவளானாள். அங்கியங் கடவுள் அவள் பின் வந்து 'நான் செய்ய வேண்டியது யாது?'



என்று கேட்க, மதுரை நகரில் உள்ள நல்லவரை நீக்கி மற்றவரை மதுரையோடு கேடுறக் கொளுத்த வேண்டுமென்று ஆணையிட்டாள். அம்மதுராபுரியில் கோயில் கொண்ட காவல் தெய்வம் அவள் கணவன் கொலையுண்டமைக்கும் அவள் துயருக்கும் அவர் தம் முன்னைப் பிறவியே காரணம் என்று விதியின் பயனை விளக்கி உரைத்தது. எனினும் கண்ணகி துயர் நீங்காளாய் மதுரைமாநகரின் மேலை வாயில் வழியாக மேற்கு நோக்கிச் செல்வாளானாள்.

கண்ணகி இராப்பகல் வேறுபாடு இன்றி நடந்து கொண்டேயிருந்தாள்; ஒரு நாள் இரு நாளன்று. பதினான்கு நாட்கள் நடந்தாள். சோழநாட்டில் பிறந்து மணம் புரிந்து வாழ்ந்து, பின் பாண்டிய நாட்டில் கணவனைப் பறிகொடுத்த கண்ணகி, நடந்து நடந்து சேர நாட்டு எல்லையுள் சென்று விட்டாள்; பதினான்காம் நாள் தன்னுடைய கணவனோடு சுவர்க்கம் புகும் காலத்தை எண்ணிக்கொண்டே நடந்தாள்போலும்; அந்த வேளையும் வந்தது. பதினான்காம் நாள் நெடுவேள் குன்றத்தின் அடியில் வந்து நின்றாள்; நிமிர்ந்து நோக்கினாள்; மலையின் மேல் ஏறினாள்; ஏறி அங்கிருந்த வேங்கை மரத்தின் நிழலிலே நின்றாள். விண்ணிலிருந்து விமானம் ஒன்று வந்தது. அதில் கோவலன் தெய்வப் பொலிவோடு விளங்கினான். கண்ணகியும் அதில் ஏறி உட்கார்ந்தாள். விமானம் வான்வழிப் பறந்து சென்றது. இக்காட்சியை அம் மலையில் வாழ்ந்த குறமக்கள் கண்டனர்; வியந்தனர். குறவர் காணக் குன்றம் ஏறிக் கணவனோடு சுவர்க்கம் புகுந்த கண்ணகியின் கதை முடிந்தது.

எனினும், அதுவே செங்குட்டுவன் வரலாற்றை விளக்க வழியாகவும் அமைந்தது.

மலைவாழ் வேடுவர்கள் விண்ணிலிருந்து விமானம் வந்ததையும், கண்ணகி அதில் ஏறித் துறக்கம் சென்றதையும் கண்டு வியந்தனர். தங்கள் நாட்டு மன்னனாகிய சேரன் செங்குட்டுவனுக்கு அச்சிறப்பைக் கூற விரும்பினர். அவர்கள் நினைத்த அதே வேளையில் சேரன் தன் தலைநகராகிய வஞ்சியிலிருந்து புறப்பட்டுத் தன் மனைவியாகிய கோப்பெருந்தேவியும், அமைச்சரும், சேனைத் தலைவரும் பிறரும் புடைசூழப் பக்கத்தில் இருந்த மலை வளங்காண வந்து சேர்ந்தான். அம்மலையின் பக்கத்தில் பேரியாறு ஓடிக் கொண்டிருந்தது. அவ்வாற்றின் மணல்கரை மனத்துக்கு மகிழ்ச்சிதரும் போலும். அம்மணல் கரையில் வந்து சேரன் செங்குட்டுவன் தங்கியிருந்தான்; மலையின் வளங்களையெல்லாம் தன் தேவியோடும் மற்றவரோடும் கண்டு களித்து மகிழ்ந்தான். இயற்கை வளக் காட்சிகளோடு, குன்றக் குறவர் மகிழ்ந்து பாடும் பாட்டொலியும் அவனையும் மற்றவரையும் மகிழ்வித்தன. மலையில் இயற்றும் முருக பூசையும், அம்முருகனைப் பாராட்டும் பாடல்களும் குன்றக் குரவையாக அவனை இன்பத்து ஆழ்த்தின. இவ்வாறு இயற்கையும் மக்கள் பாடலும் பிறவும், மகிழ்விக்க, சேரன் தன் ஓலக்கச் சிறப்புடன் பேரியாற்றின்கரையில் தங்கியிருந்தான்.

கண்ணகியை நெடுவேள் குன்றத்தில் கண்ட வேடுவர் தம் அரசனிடம் தாம் கண்ட காட்சியைக் கூறநினைத்த நேரமும் அதுதான். அவர்தம் அரசன்



அண்மையிலே வந்து தங்கியிருக்கின்றான் என்ற செய்தி, அவர்களுக்கு மகிழ்ச்சி யூட்டிற்று. உடனே தங்களது மலையில் உண்டாகும் பொருள்களையெல்லாம் சேர்த்து எடுத்துக் கொண்டு, அரசனைக் கண்டு, கொண்டு வந்தவற்றைக் காணிக்கையாக வைத்து வழிபட்டனர். அவர்கள் கொண்டுவந்தவற்றை வரிசைப்படுத்தி அழகுறக் காட்டுகின்றார் இளங்கோவடிகள். கொண்டுவந்த பொருள்களைச் செங்குட்டுவன் அடியில் வைத்து, 'ஏழ் பிறப்படியேம் வாழ்க நின் கொற்றம்' என வாழ்த்தினர். பின்னர் நெடுவேள் குன்றத்தில் தாம் கண்ட காட்சியை அப்படியே எடுத்து விளக்கினர். அதைக் கேட்ட அனைவரும் வியப்பெய்தினர். செங்குட்டுவனும், வியந்து அதன் வரலாற்றை அறிய விரும்பினன். கண்ணகியின் வரலாற்றை யாரே விரித்துரைப்பார் எனக் கவன்றான் போலும் காவலன். அருகிலிருந்த தண் தமிழ்ச் சாத்தன் நடந்ததைக் கூறலானான். கண்ணகி மதுரையில் நிகழ்த்திய அருஞ்செயல்களையெல்லாம் அங்கிருந்து நேரில் கண்டவர் சாத்தனார். மதுரைமாநகர் எரியுண்டபின் தம் நண்பரான இளங்கோவடிகளுடன் தங்கியிருக்க வஞ்சி நோக்கி வந்தவர் அவர். அவரே பின் மணிமேகலை என்னும் பெரும் காப்பியத்தை எழுதியவர். அவர் மதுரையில் நடந்தவற்றைத் தாமே நேரில் கண்டவராதலின் அனைத்தையும் விளங்க உரைத்தார். அனைவரும் கேட்டு வியந்து துணுக்குற்றனர்.

பாண்டியன் முடிவினைக் கேட்ட செங்குட்டுவன் அப்பாண்டியன் திறத்தை வியந்து போற்றினான். அவன் தவறிழைத்த போதிலும், அக்குற்றம்

அவன் போன்ற மன்னர் செவிப்படுமுன் தானே இறந்து, தன்னால் விளைந்த கோலை மீண்டும் நிமிர்த்திய நிலையை எண்ணிப் போற்றினான் மேலும் அம்மன்னனோடு அரசு கட்டிலில் மாய்ந்த கோப்பெருந்தேவியை நினைத்தான். கொலையுண்ட கோவலனையும், அவன் வீர பத்தினியாகிய கண்ணகியையும் நினைத்தான். இரண்டு பத்தினிப் பெண்களில் யார் சிறந்தவர் என்று எண்ணிற்று அவன் உள்ளம். அவருள் சிறந்தவருக்குக் கோயிலெடுத்து வழிபடவேண்டும் என்று கருதினான்; இருவருள் சிறந்தவர் யார் என அறிய ஆராய்ந்தான்; அருகில் உள்ள அமைச்சர் முதலானவரைக் கேட்டான். அனைவரும் சொல்வதறியாது நின்றனர். பக்கத்தில் அமர்ந்திருந்த செங்குட்டுவன் தேவியார் பதில் கூறுவாராயினர். 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று உடன் உயிர் நீத்த பாண்டிமாதேவி சிறந்தவள்தான். அவள் துறக்கத்தே பெருந்திருவுற்றுச் சிறப்பாளாக! நம் நாடு நோக்கி வந்து, நம் நாட்டு எல்லையில் கணவனோடு துறக்கம் புக்க கண்ணகிக்கே வழிபாடு செய்தல் வேண்டும் என்று விளக்கி உரைத்தார் தேவியார். கேட்ட அனைவரும் அதுவே நன்று எனக் கூறினர். பத்தினித் தேவியாகிய கண்ணகிக்குக் கல்லெடுக்க வேண்டிய வகையினை ஆராய்ந்தனர். சிலர் பொதிய மலையில் கல்லெடுத்துக் காவிரியில் நீராட்டலாம் என்றனர். சிலர் இமயத்திலிருந்து கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டலாம் என்றனர். செங்குட்டுவனுக்குப் பொதியலில் எடுப்பதிலும் இமயத்தில் எடுப்பதே ஏற்றம் எனத்



தோன்றியது. எனவே இமயம் வரை சென்று கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வரவேண்டிய தன் விருப்பத்தைக் கூறினான். அருகில் இருந்த வில்லவன் கோதை என்னும் சேனைத் தலைவன் செங்குட்டுவன் முன் வடநாடு சென்ற சிறப்பை எல்லாம் விளக்கி, அங்குச் செல்லினும் தடுப்பவர் இல்லை என்பதைக் காட்டி, வடநாட்டு வேந்தர்களுக்கெல்லாம் ஓலை போக்க வேண்டிய அவசியத்தைச் சொன்னான். அதைக் கேட்ட அழும்பில் வேள் என்ற அமைச்சன் தம் தலைநகரில் எல்லா நாட்டு ஒற்றர்களும் இருப்பதால், அத் தெருக்களில் எழுப்பும் முரசொலியே அந்நாட்டு மன்னர்களுக்கு அறிவுறுத்தும் என்றான். அப்படியே நாம் முன் கண்டயடி வஞ்சித் தெருக்களிலெல்லாம் செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரையைப் பறை சாற்ற ஏற்பாடு செய்தனன். மலைவளம் காணவந்த செங்குட்டுவன் தன் மாளிகை சேர்ந்தான்.

## 4. வடநாட்டில் சேரன்

வடநாட்டுக்குச் செங்குட்டுவன் புறப்பட இருந்த அதே நிலையில் அங்கிருந்து மற்றொரு செய்தியும் வந்தது. அதை முன்னும் கண்டோம். அதாவது ஆண்டுள்ள கனக விசயர் என்ற ஆரிய மன்னர், 'தென் தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின் தவழும் இமய நெற்றியில் விளங்கு வில்புலி கயல் பொறித்த நாள் எம் போலும் முடி மன்னர் ஈங்கில்லை போலும்' என்று பழித்துரைத்த செய்தி அவன் செவிகளுக்கு எட்டியது. அது பொறாத செங்குட்டுவன் வெஞ்சினம் புகன்றான். 'தமிழ் மன்னரைப் பழித்துரைத்த அவ் வட நாட்டவரை வென்று அடக்கேனாயின் என் நாட்டுக் குடிகளை வருத்தும் கொடுங் கோலனாகக் கடவேன்' என்றான். உடனே சேனைகள் திரண்டன. அவையிலுள்ள அந்தணர் கூறிய அதே நல்ல வேளையில் வாளையும் குடையையும் வடக்குநோக்கிச் செலவிட்டான். சேனைக்குப் பெரு விருந்து செய்தான். வஞ்சி மாலையைச் சூட்டினான்.

மறுநாட் காலையில் புறப்படு முன் தன் தலைநகரிலுள்ள தெய்வங்களை யெல்லாம் வணங்கினான் செங்குட்டுவன். தான் வணங்கும் சிவபெருமானை முதலில் போற்றி அவன் திருவடி நிலைகளைத் தலையிலே தாங்கிக் கொண்டான். ஆடகமாடமென்னும் கோயிலில் எழுந்தருளிய திருமாலின் சேடங் கொண்டு சிலர் நிற்க, அவர் கொண்டு வந்ததைத் தோளில் ஏந்தினான். பின் பிற கடவுளர்களை யெல்



லாம் வணங்கினான். அந் நாட்டு நாடக மக்களும் மகளிரும் கூடி வேந்தனுக்கு வெற்றி உண்டாக வாழ்த்தினர். தம் கோப்பெருந் தேவியிடம் பிரியா விடை பெற்று, அமைச்சரும் பிறரும் புடை சூழ, பெருஞ்சேனை முன் நடக்க, கலை நலம் காட்டும் கற்றோரும் மற்றோரும் உடன் வர, சேரன் செங்குட்டுவன் கல்லெடுக்க வடக்கு நோக்கிப் பயணமானான்.

செல்லும் வழியில் செங்குட்டுவன் ஓய்வில் கழித்த ஓர் இரவுப் பொழுதை விளக்க விரும்புகின்றார் இளங்கோவடிகள். முதல் நாள் இரவில் அவன் நீலகிரி என்னும் நெடும்பொற் குன்றத்தே தங்கினான். அங்கு வந்த முனிவர்கள் அவனை வாழ்த்தினர். அவன் இமயம் வரை செல்வது கருத்தாயின், அம் மலையில் வாழும் அருமறை அந்தணரைக் காப்பது அவன் கடமை என்று கூறி, அவர்கள் தாம் பொதிய மலைக்குச் செல்வதாகக் கூறிப் புறப்பட்டனர். பின்னர் அந்த நீலகிரி மலையை அடுத்து வாழ்ந்த கொங்கண நாடரும் கொடுங்கரு நாடரும் வந்து தம் தம் நிலைக்கேற்ற வகையில் ஆடல் பாடல்களால் அரசனை மகிழ்வித்தனர். இவர்களைத் தவிர வேறு மக்களும்—குட்ட நாடு முதலியவற்றில் வாழ்வாரும்—தங்கள் 'அரசர்க்கு அரசனாகிய செங்குட்டுவன் வந்தான் வந்தான்' என்று வாழ்த்தி, அவனது 'வடநாட்டு யாத்திரை வெற்றியுடன் சிறக்க' எனப் பாடி ஆடினர். அவர் தம் ஆடல் பாடல்களைக் கண்டு கேட்ட சேரன் செங்குட்டுவன் அவரவர்களுக்கு ஏற்பப் பொன்னும் மணியும் கொடுத்துப் போற்றினான்.

இவன் முரசறைந்து இவ்வாறு வடநாட்டு யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்பே இச் செய்தியை வஞ்சி நகரிலிருந்த அவ்வந்நாட்டு ஒற்றர்கள் தத்தமது நாடுகளுக்கு விரைந்து அனுப்பி விட்டனர் போலும். செங்குட்டுவனுக்கு நெருங்கிய நட்பாளராகிய 'நூற்றுவர் கன்னர்' என்னும் வட நாட்டு வேந்தரும் இதை அறிந்தனர்; தம் நட்பினனை செங்குட்டுவன் பத்தினித் தேவியின் படிமம் பொருட்டுத் தம் நாடு நோக்கி வருவதை அறிந்து அவனை வரவேற்கு முகத்தான் வரிசைகள் பல அனுப்பினர். அவற்றைக் கொண்டு சஞ்சயன் என்னும் தலைவன் நீலகிரியில் வந்து செங்குட்டுவனைப் பார்த்து தன் மன்னர் கூறியதை உரைத்தான்; வடநாட்டு யாத்திரையில் தன் அரசர் செய்யக்கூடிய உதவிகளையெல்லாம் கூறினான். செங்குட்டுவனும் அவன் கொண்டு வந்த வரிசைக்கு மகிழ்ந்து சஞ்சயனுக்குச் சிறப்புச் செய்து, தான் தன் சேனையுடன் கங்கையாற்றைக் கடப்பதற்கு 'நூற்றுவர் கன்னர்' கலம் தந்து உதவ வேண்டும் என்பதை உரைத்தான். மேலும் தான் வட நாடு நோக்கி வருவது பத்தினி தேவிக்குக் கல்லெடுத்து வருவதோடு, வடநாட்டரசனாகிய பால குமரன் மக்களாம் கனக விசயர் தம் செருக்கடக்கவே என்பதையும் கூறினான். அனைத்தும் கேட்ட சஞ்சயன் தன் அரசருக்கு எல்லாவற்றையும் சொல்லுவதாக விடை பெற்றுச் சென்றான். பிறகு பிறநாட்டு மன்னர்கள் செங்குட்டுவனுக்குச் சிறப்புச் செய்வதற்காகக் கொணர்ந்த பொருள்களை யெல்லாம் முறைப்படி ஏற்றுக் கொண்டான் செங்குட்டுவன். பின்னர்



நீலகிரிப் பாடியிலிருந்து, தனது பெருஞ்சேனையுடன் சேரன் வடக்கு நோக்கிப் புறப்பட்டான்.

வடக்கு நோக்கிய மன்னன் வழியெலாம் கடந்து கங்கைக் கரையை அடைந்தான். அங்கு முன் ஏற்பாட்டின்படியே நூற்றுவர் கன்னர் மரக்கலங்களுடன் தயாராக இருந்தனர். கங்கையைக் கடந்தான் செங்குட்டுவன். பின்னரே தான் நாம் மேலே கண்டபடி கனக விசயரோடு போர் புரிந்தான் சேரன். அப் போரைப் பற்றியும், அதன் நிலைபற்றியும் முன்னரே போர்ச் செயலில் நாம் அறிந்துள்ளோம். அவ்வாறு கனக விசயரைப் போரில் வென்று வாகை சூடி, அவர்கள் தலையிலேயே பத்தினிப் படிமத்தையும் எடுத்துச் செல்ல முடிவு செய்தான் செங்குட்டுவன்.

போர் முடிந்த பின் செங்குட்டுவன் மேலும் செல்ல விரும்பவில்லை போலும். அவன் வடக்கு நோக்கி வந்ததே முக்கியமாகத் தமிழ் வேந்தரைப் பழித்துரைத்த கனக விசயரை வெல்வதற்காக வன்றோ! அவன் வெற்றி கொண்டான்; வடநாட்டில் யாரும் தனக்குப் பகைவர் இல்லை என்பதை உணர்த்தினான். எனவே இமயம் செல்ல வேண்டிய வேலை இல்லை யன்றோ! எனினும் பத்தினித் தேவிக்கு இமயத்திலிருந்து தானே கல் கொணர வேண்டும்! அதற்காகத் தன் தானைத் தலைவனாகிய வில்லவன் கோதையை இமயம் அனுப்பினான். அவனும் விரைந்து சென்று, இமயத்தில் பத்தினித் தேவிக்குக் கல் எடுத்து விரைவில் கொண்டு வந்து சேர்த்தான்.

செங்குட்டுவன் அக் கல்லை கனக விசயர் தலையில் ஏற்றினான். பின் அனைவரும் கங்கையைக் கடந்து தென் கரையில் தங்கியிருந்தனர்.

பாடி வீட்டில் தங்கிய பின் தான் வஞ்சி விட்டு வந்த நாளிலிருந்து அன்று வரை நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக நினைத்தான் செங்குட்டுவன். கனக விசயரோடு செய்த போரில் வீரம் விளைத்து வெற்றி கண்ட எல்லா வீரர்களுக்கும் சிறப்புக்கள் பல செய்தான். மறைந்த வீரர் தம் குடும்பங்களுக்கு மானியங்கள் அளித்தான். மேலும் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் செய்ய வேண்டிய சிறப்புகளையெல்லாம் செய்து சிறக்க அமர்ந்திருந்தான். அதே வேளையில் தமிழ் நாட்டிலிருந்து வட நாட்டுக்குக் கங்கையாடப் போந்த மாடலன் என்னும் மறையவன் செங்குட்டுவனைக் கண்டு வணங்கினான். அவன் கனக விசயரையும் பத்தினிக் கல்லையும் கண்டான். உடனே அவனுக்கு முன்னைய நிகழ்ச்சிகளெல்லாம் நினைவிற்கு வந்தன போலும். 'அரசே! மாதவி என்னும் கணிகைச் செல்வியின் கானற் பாட்டு, கனக விசயர் தம் முடித்தலை நெரித்தது' என்று சொன்னான். அனைவரும் அவன் சொல்வதை அறிந்து கொள்ளவில்லை. வில்லால் வென்று வீரம் காட்டிய வேல் வேந்தன் முன் 'பாட்டால் முடித்தலை நெரித்தது' என்று மாடலன் கூறியதன் பொருள் விளங்கவில்லை. செங்குட்டுவனும் மாடலனை அவன் கூறியதன் பொருளை விளக்குமாறு கேட்டான். மாடலனும் தான் அறிந்தவற்றைக் கூறலானான்.



'காவிரிப்பூம் பட்டினக் கடற்கரையில் கோவலனும் மாதவியும் மகிழ்ந்து பாட்டிசைக்க, அப்பாட்டின் கருத்து வேறுபாட்டால், மாதவியைவிட்டு நீங்கினான் கோவலன். நீங்கியவன் நேரே தன் மனைவியாகிய கண்ணகியை அழைத்துக் கொண்டு வாணிபத்தின் பொருட்டு மதுரைமாநகர் நோக்கிச் சென்றான். அங்குக் கோவலன் கொலையுண்ண, மதுரையைச் சுட்டெரித்த கண்ணகி வஞ்சி நோக்கி வந்து நெடுவேள் குன்றம் அடி வைத்தேறிக் கணவனொடு சுவர்க்கம் புகுந்தாள். அக்காட்சியைக் கண்ட மலைவாழ் வேடுவர் அந்நிகழ்ச்சியைச் செங்குட்டுவனுக்கு உணர்த்தினர். அதை அறிந்த மன்னன் இமயத்தில் கல்லெடுக்க வந்து அதைக் கனக விசயர் தலையில் ஏற்றினன் என்று தான் கூறியதன் பொருளை விளக்கமாக உரைத்தான் மாடலன். அவன் சொல்லின் திறம் அறிந்து அனைவரும் போற்றினர்.

மாடலன் மேலும் தான் மதுரையில் நிகழ்ந்த கோவலன் கொலையைப் புகாரில் கூறியமையான் இரு குடும்பங்கள் உற்ற துன்பங்களைக் கூறி, அத்துன்பங்கள் தன் கூற்றினால் உண்டானமையின் தன் பாவம் போக்கக் கங்கையாட வந்ததையும் கூறினான். பின்னும் மதுரை மாநகரில் பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்த பின், கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் மதுரை வந்து மன்னனாகித் தன் நாட்டுக்கு உண்டான கேட்டையும் கெட்ட பெயரையும் எண்ணி, அதற்குக் கழுவாயாகப் பொற்கொல்லர் ஆயிரவரை ஒரு பகலில் பலியிட்டதை விளக்கினான். இவ்வாறு தன் நாட்டு

நிகழ்ச்சிகளை யெல்லாம் கேட்டான் சேரன் செங் குட்டுவன்.

அப்போது மாலையாயிற்று. மாலைச் சந்திரனை உற்றுநோக்கினான் செங்குட்டுவன். அருகிலே இருந்த சோதிடன் அரசன் குறிப்பறிந்து வஞ்சிநீங்கி முப்பத்திரண்டு திங்கள் கழிந்தன என்று கூறினான். உடனே அரசனும் தலைநகர் நோக்கிச் செல்ல வேண்டுமென ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னான்; தன் நண்பர் நூற்றுவர் கன்னருக்கும் மற்றவர்களுக்கும் வரிசை நல்கினான்: மாடலனுக்குத் தன் நிறையளவு பொன்னை நிறுத்துக் கொடுத்தான். அமைச்சரும் பிறரும் பலருக்கும் தானம் வழங்கினர். பின் அனைவரிடமும் விடை பெற்று, சேரன் செங்குட்டுவன் தன் நாடு நோக்கிப் புறப்பட்டு, நல்லதொரு நாளில் நாட்டு மக்கள் அனைவரும் தன்னை எதிர்கொள்ள, வானவன் மாதேவியார் மகிழ வஞ்சியுள் வெற்றி வீரனாகத் திரும்பினான்.

## 5. வஞ்சியில் பெருவிழா

தம் வேந்தன் பெற்ற வெற்றியினைத் தாம்பெற்றதாகவே கருதினர் சேர நாட்டு மக்கள். வந்த வேந்தனைப் பல்வேறு சிறப்புக்களோடு வரவேற்றனர். சேரன் பெருந்தேவியும் அரசனை வரவேற்று அவன் பெற்ற வெற்றிச் சிறப்புக்களை யெல்லாம் கேட்டறிந்தாள். செங்குட்டுவன் தன்னுடன் வந்த அனைவருக்கும் ஓய்வினைத் தந்து ஆற்றியிருக்குமாறு பணித்தான். கண்ணகியின் கல்லைத் தூக்கி வந்த கனக விசயரை நேரே வஞ்சிக்குக் கொண்டுவரவில்லை. அவர்களைத் தக்க காவலுடன் பிற தமிழ் வேந்தராகிய சோழ பாண்டியரிடம் அனுப்பினான். கனக விசயர் தமிழ் மக்களைப் பழித்துரைத்தமையின் அவர்கள் பெற்ற அவமானத்தை மற்றைய தமிழ் வேந்தரும் அறிய வேண்டுமென விழைந்தான் செங்குட்டுவன். எனினும் சோழனும் பாண்டியனும் அதைத் தவறுகக் கருதி விட்டார்கள். 'தனக்குப் புறங்கொடுத்துத் தோற்றோடிய வேந்தரை, இவ்வாறு சிறைபிடித்து அவமானப் படுத்துவது தமிழ் அரசர் மரபுக்கு ஏற்றதன்று' என்றனர் அவ்விருவரும். கனக விசயரை அழைத்துச் சென்ற வீரர்கள் பிற தமிழ் வேந்தர்கள் கூறியதை உரைத்த அளவிலே சேரன் செங்குட்டுவன் சினம் கொண்டான்: உடனே படையெடுத்துச் சென்று அவர்களை அடக்க நினைத்தான். எனினும் அருகிலேயிருந்த மாடல மறையோன் அறவுரை கூற அடங்கினன். மாடலன் கூறியது என்ன?

உலகம் தோன்றிய நாள் தொட்டுச்சேரர் மரபில் தோன்றிய வீரம் பொருந்திய பேரரசர்கள் பலரைச் செங்குட்டுவன் முன் கொண்டுவந்து நிறுத்தினான். அவர்களுள் ஒருவராவது வாழவில்லை என்று யாக்கை நிலையாமையை எடுத்துக் காட்டினான். செல்வ நிலையாமையைத் தோல்வியுற்ற கனக விசயரைக் காட்டி உணர்த்தினான். இளைய வீரனாக இருந்த சேரன் மூத்தமையை எடுத்துக்காட்டி இளமை நிலையாமையை உணர்த்தினான். மேலும் பிறந்த உயிர் உலகில் ஆற்ற வேண்டிய நல்ல பணிகளையெல்லாம் தொகுத்துக் கூறினான். அவற்றுடன் செங்குட்டுவன் வயது ஐம்பதிற்றும் மேலானமையைக் காட்டி, அதன் பிறகும் அறவேள்வி செய்யாது, மறவேள்வி செய்வது தகாதது என்று விளங்க உரைத்தான்.

மாடலன் கூறிய அறவுரை செங்குட்டுவன் உள்ளத்தை மாற்றிவிட்டது. பிற தமிழ் மன்னர் மேல் படையெடுக்க நினைத்த எண்ணத்தைக் கைவிட்டான். கண்ணகிக்கு விழா ஆற்ற வேண்டிய வழிவகைகளை ஆராய்ந்தான். அப்பத்தினி விழாவின் சிறப்பினைக் கருதிச் சிறையிலிருந்தவர் அனைவரையும் விடுதலை செய்தான். கனக விசயரையும் கூட விடுதலை செய்து, கண்ணகி விழா வரையில் அவர்களை வஞ்சியிலேயே தனது ஒப்பற்ற வேளாவிக்கோ மாளிகையில் தங்கியிருக்கச் செய்தான். பின் அமைச்சரையும் பிறரையும் அழைத்து விழாவினைப் பற்றி அனைவருக்கும் தெரிவிக்கவும், விழா ஏற்பாடுகளைச் செய்யவும் ஆணையிட்டான்.



அவன் விழாவுக்குப் பலநாட்டு மன்னரும் மக்களும் வந்திருந்தனர். அவர்கள் யார் யார் என்பதை இளங்கோவடிகள் நன்கு விளக்கியுள்ளார்.

ஆரிய மன்னராம் கனக விசயரையும், சிறை நீக்கம் பெற்ற பிற மன்னரையும், கொங்கர், மாளுவர் முதலிய மன்னரையும் காட்டுகின்றார். கடல்தாண்டி இலங்கையிலிருந்து 'கயவாகு' என்ற மன்னனும் வந்தான். அனைவரும் பத்தினித் தேவியைத் தத்தம் நாட்டிற்கு எழுந்தருள வேண்டுமென்றுவேண்ட, அவ்வாறு வருவதன் அறிகுறியாக 'தந்தேன் வரம்' என்று குரல் எழுந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

கண்ணகியின் விழா நடக்கும் காலத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்தனவாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. மாடல மறையோனும், தேவந்திகையும், மூன்று சிறு பிள்ளைகளும் பலப்பல உண்மைகளை உணர்த்தினர். கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், அடைக்கலப் பொருளைக் காக்க இயலாத மாதரியும் எவ்வாறு வஞ்சியில் அரட்டன் செட்டிக்கு இரட்டையர்களாகவும் திருவடி பிடிப்பான் மகளாகவும் பிறந்தார்கள் என்பதையெல்லாம் மாடலன் எடுத்து விளக்கினான். கோவலனும் கண்ணகியும் புகார் நகரைவிட்டு நீங்கியபின் மாதவி மனமொடிந்து தன் மகளாகிய மணிமேகலையைத் துறவியாக்கிய வரலாற்றையும் அனைவரும் கேட்டனர். இவ்வாறு பத்தினித்தேவியாகிய கண்ணகியின் விழாவிலே, அவளோடு தொடர்பு கொண்டிருந்தார் அனைவரையும் பற்றிப் பல உண்மைகளை உணர்ந்து

கொண்டான் சேரன் செங்குட்டுவன். இறுதியாக அனைவரும் பத்தினித் தேவியை வணங்கி வாழ்த்திச் சென்றனர். இவ்வாறு கண்ணகி வரலாற்றையும் செங்குட்டுவன் சிறப்பையும் சேர்த்துக் கூறிய இளங்கோவடிகள் இறுதியாகத் தன் வரலாற்றையும் இளமையில் துறவு பூண நேர்ந்ததையும் விளங்கிய கண்ணகி தெய்வத்தின் சிறப்பியல்பை எடுத்துக் கூறுகின்றார். ஆம். பத்தினி விழாவோடு செங்குட்டுவன் வரலாறும் முடிவுற்றது போலும். மாடல மறையோன் வாய்மொழிப்படி அவன் பின்னர் போர்மேற்செல்லாது, அறத்தாறு நாட்டை அமைதியாக ஆண்டு இறுதி நாட்களைக் கழித்திட்டான் என எண்ண இடமுண்டு. இனி, செங்குட்டுவன் குணநலங்கள் சில கண்டு நாமும் அவன் வரலாற்றை முடிப்போம்.

## 6. குணநலன்கள்

சேரன் செங்குட்டுவன் சிறந்த வீரனாகவும் நல்ல அரசியல் தலைவனாகவும் மட்டும் வாழ்ந்தவனல்லன். அவன் சிறந்த பண்பாடுகளையும் நல்ல குணங்களையும் பெற்றவனாகவும் விளங்கினான். நாம் அறிந்த வகையில் ஒன்றிரண்டு காணல் சிறந்ததாகும்.

மேலே வடநாட்டுப் போரைப்பற்றியும் கனக விசயர் சிறை பட்டதுபற்றியும் கண்டோம். ஆனால் அதே கனக விசயர் உடனே சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். இதிலிருந்து சேரனிடம் எவ்வளவு வீரம் உள்ளதோ அவ்வளவு கருணையும் உள்ளது என அறிகின்றோமன்றோ! தம்மைமட்டு மன்றித் தமிழ் நாட்டு வேந்தரையே இழித்துரைத்தமையால் தான் அவன் இமயத்திற்குக் கல் கொண்டு வருவதன் மூலம் அவர்களை வெல்ல வட நாடு நோக்கிப் புறப்பட்டான். புறப்பட்டுப் போராற்றி, வெற்றியும் கண்டு அவர்களையும் சிறை செய்தான். பெரும்பாலான அரசர்கள் இதைத்தான் செய்வார்கள். ஆனால் செங்குட்டுவன் அதற்கு மேலாக, அவர்களை நல்லதொரு விழா நாளில் சிறையிலிருந்து விடுவித்துச் சிறப்புச் செய்தான் என்பதில்தான் அவனது நல்ல பண்பாடு நிறைந்துள்ளது. தம் விரோதியும் தவறு அறிந்து திருந்துவராயின் அவர்களை மன்னித்து விடுவது என்ற சிறந்த நல்ல குணமன்றோ அது!

மற்றும் தன் வீரத்தைப் பழித்துரைத்த பாண்டிய சோழ மன்னர் மேல் படையெடுக்க முன்

ணின்ற செங்குட்டுவன் பிறகு மாடல மறையோன் வாய்ச்சொற் கேட்டுச் சீற்றம் அடங்கி அமைதி பெற்ருன் எனவும் காண்கின்ருேம். இதிலிருந்து அவன் அறிவோரை ஆதரித்ததோடு, அவர்தம் வாயிலிருந்து வரும் நல்ல அறிவுரைகளுக்கு மதிப்பும் கொடுத்துப் போற்றிஞன் என்பதும் தெரிகின்றது. அப்போது மாடலன் அந்த அறிவுரை கூறியிராவிட்டால் தமிழ் நாடே ஒரு பெரும் போர்க்களமாகி யிருக்குமன்ருே! அம் மாடலன் செங்குட்டுவன் செவியே வயலாக, தன் சொல்லே ஏராக, நல்ல அறிவு வித்துக்களை விதைக்க, அதனுல் விளைந்த பயன்தான் நாடு நின்றது. அதுமட்டுமன்றி, அதற்கு அடுத்து அவன் வேறு போர் செய்ததாகவே குறிப்புக்கள் கிடையா!

செங்குட்டுவன் காலத்தில் தமிழ் நாட்டில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்கள் வாழ்ந்து வந்தன. அவன் காலம் சமய வெறியில்லாத காலம். அரசனும் அவ்வாறே பொது நோக்கோடு வாழ்ந்து வந்தான். சேரன் செங்குட்டுவன் சைவசமயத்தைச் சார்ந்தவன் என்பதைச் சிலப்பதிகாரம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. அவன் தம்பி இளங்கோவடிகள் சமண சமயத்தவர் என்பர். அவர்களோடு வாழ்ந்த சாத்தனுர் பௌத்த சமயத்தவர். அறம் உரைத்த மாடல மறையோன் வைதிக சமயத்தவன். அனைவரையும் ஆதரித்து எல்லாச் சமயங்களையும் ஒத்து நோக்கும் நல்ல பண்பு செங்குட்டுவனிடம் இருந்தது என்பதற்கு இதனினும் வேறு சான்றும் வேண்டுமோ! அவனே எல்லாச் சமயங்களிடமும் வேறுபாடு காட்டாதிருந்தான். தன் சமயம் சைவமாயினும் மாறுபட்ட பிற சமயங்களை அவன் என்றும் வெறுத்தவனல்லன். எல்லாச் சமய மக்களுக்கும் ஆதரவு தந்தான். அவரவர் சமயக் கோயில்கள் வஞ்சியில் விளங்கின. எனவே தன் கொள்கைக்காக மற்றவரைத் துன்புறுத்தாது அல்லது வெறுக்காது அனைவரையும் தழுவிச் சென்ற உயர்ந்த குணம் பெற்றவன் செங்குட்டுவன் என்பது தெரிகின்றது.



மற்றும் செங்குட்டுவன் தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் நன்கு போற்றிப் பாதுகாத்தவன். அவர்களுக்கு அவன் கொடுத்த மதிப்பே தனிச் சிறப்புடையது. மணிமேகலை யென்னும் பெருங்காப்பியம் எழுதிய சாத்தனுர் அவன் அவைக்களத் திருந்தார். பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு கட்டிலில் இறந்த பின் கண்ணகியின் அடிச்சுவட்டைப் பற்றி இருவரும் வஞ்சிமாநகர் வந்து சேர்ந்தார் போலும். அங்கே தம் நண்பர் இளங்கோவுடன் கலந்து இறுதி வரையில் தமிழாய்ந்து தங்கியிருந்தார் என்று கொள்ள வேண்டியுள்ளது. எனவே அப்புலவர் பெருமானை ஆதரித்து, அவர் மூலம் தமிழ் நாட்டுக்கே ‘மணிமேகலை’ என்னும் பெருங்காப்பியத்தைத் தேடித் தந்த பெருமை செங்குட்டுவனுடையதாகும்.

மற்றொரு பெரும் புலவராகிய பரணரும் அவன் அவைக்களத்தை அலங்கரித்தார் என்று தெரிகின்றது. பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்தால் செங்குட்டுவனைப் புகழ்ந்த பெரும் புலவர் இவர். கடைச்சங்க காலப் புலவருள்ளே கபிலரும் பரணரும் சிறந்தவர்

என்பதை யாவரும் அறிவர். அவருள் பரணரது பத்துப் பெரும் பாடல்களால் பாராட்டப்பட்ட பெருமை செங்குட்டுவனுடையதாகும். அப்பாடலுக்கு, அவன் புலவருக்குக் கொடுத்த பரிசைப் பார்ப்போமாயின் தமிழ்ப் புலவரிடம் அவன் கொண்ட அன்பு நன்கு புலப்படும். ஐந்தாம் பாட்டுக்குப் பரணர் பரிசிலாகப் பெற்றவை உம்பர் காடு என்ற நாட்டின் முழு வருவாயும் செங்குட்டுவன் மகனாகிய குட்டுவன் சேரலுமேயாம். புலவர் பாட்டுக்குப் பொன்னும் மணியும் மாளிகைகளும் யானையும் பிறவும் கொடுப்பதைக் கேட்டிருக்கின்றோம். தன் மகனையே கொடுத்தான் என்பது நாம் கேட்டறியாத ஒன்றல்லவா? ஆம்! இத்தகைய செயற்கரும் செயல் செய்த வீரன் செங்குட்டுவன் தன்னைப் பாராட்டிப் பாடிய தமிழ்ப் பாடலுக்காகத் தன் மகனையே பரணருக்குக் கொடுத்தான் என்றால் அவன் தமிழ்ப் புலவர் மாட்டுக் கொண்ட அன்பு நன்கு விளங்குகிறதன்றோ!

மேலும், இளங்கோவடிகளாகிய பெரும் புலவர் நம் மன்னவர் பெருந்தகையின் தம்பியே என்பதை அறிவோம். துறவு பூண்டினும் வஞ்சியை விட்டு நீங்காது, மேலும் பல புலவரையும் உடன் வைத்துக் கொண்டு தமிழைக் காத்த அப்புலவர் பெருமான் எழுதிய சிலப்பதிகாரம் இன்று அன்றைய தமிழ் நாட்டைப் பல வகையில் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அவரைத் தன்னுடனே இருத்திக் கொண்டு, அவ்வப்போது அவர் தம் உரைகளையும் ஏற்று, இருவரும் ஒருவர் என்னுமாறு செங்கோல்



செலுத்திய செங்குட்டுவன் புலவர்பால் கொண்ட அன்பு அளவிடற்கரியது.

சேரன் தன் குடியையே தழுவி வாழ்ந்தவன். தம்பியும் மனைவியும் மகனும் பெற்று வாழ்ந்த செங்குட்டுவன் தன் தாய்வழி மரபினரான சோழரையும் அவ்வப்போது காத்து வந்த நிலை அவன் சுற்றம் பேணுதலின் பண்பை நன்கு விளக்குகின்றது. அவர்களுக்குத் தாழ்வு உண்டான காலத்தில் தானே படையெடுத்துச் சென்று அவர்கள் பகைவர்களை வென்று, அவர்தம் வாழ்வைச் செம்மைப் படுத்தினன் எனக் கண்டோம். எனவே, சுற்றம் தழுவல் என்ற நற்பண்பும் அவனுக்கு ஓர் அணியாயிற்று.

இவ்வாறு சேரன் செங்குட்டுவனது குண நலன்களைக் கூறிக்கொண்டே செல்லலாம். அது விரிவடையும். இத்தகைய அரும் பண்புகளை யெல்லாம் ஒருங்கே கொண்டு, இமயம் வரையில் தமிழர் தம் ஆணையை நிலை நாட்டி வீரமும் அன்பும் கொண்டு ஆண்ட செங்குட்டுவன், கரிகாலன் ஆகியோர் வாழ்ந்த கடைச் சங்கத்து இறுதிக் காலமே தமிழ் நாட்டின் பொற்காலம் என்பது வெள்ளிடை மலை.

112405